# சிலந்திக் கூடு

எழுதியவர் :

**தங்கமணி**

பாலர் நாவல்



பிரேமா
பிரசுரம்
சென்னை-24

விலை ரூ. 1-0-0

**பிரேமா பிரசுரம்—26**

பாலர் நாவல்—1.
முதற்பதிப்பு - ஏப்ரல், 1955.
சகல உரிமைகளும் பெற்றது.

இந் நாவலில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. இறந்தோர், இருப்போர், இனிப் பிறப்போர் எவரையும் குறிப்பிடுவன ஆகா.

அச்சிட்டோர் :
பிரேமா ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-24.

தயாரிப்பு:

அரு. ராமநாதன்

இந் நூலாசிரியர் எழுதிய அடுத்து வெளிவரும் பாலர் நாவல் :

**ஒற்றைக் கண்ணன்**

# முதல் அத்தியாயம்



ஆயிமோங்கிபுரத்து எல்லைக் கோடியிலுள்ள அந்த அழகிய தாமரைக் குளம் தங்கமாய்ப் பளபளத்துக் கொண்டிருந்தது.

ஏனெனில்—அது காலைச் சூரியனின் பொன்னிற வெயிலைப் பிரதிபலித்துக்கொண்டிருந்தது!

அந்த அழகிய தாமரைக் குளக் கரையிலுள்ள வழு வழுப்பான ஒரு மொட்டைப் பாறையின்மீது பதுமையாய் உட்கார்ந்திருந்த அமுதலின் அழகிய முகத்தில் சிந்தனை யின் சாயை படர்ந்து கொண்டிருந்தது.

கடந்த மாதத்தில் வந்துபோன முழுப் பரீட்சையில் கேட்கப்பட்ட ஒரு சில கேள்விகளுக்கு, தான் எழுதிய

பதில்கள் 'சரியா?—முறையா?' என்பதை அலசிப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்!

அங்கே அமைதி விழித்துக் கொண்டிருந்தது. விழித்துக் கொண்டிருக்கும் அமைதியை அந்தத் தாமரைக் குளத்தைச் சூழ்ந்த மகிழந்தோப்புப் பறவைகள் கூவிக் கும்மாளமடித்துச் சாகடித்துக் கொண்டிருந்தன!

இந்தச் சமயத்தில், அந்தக் குளக்கரையில் மிகத் துல்லியமாய்க் குழைந்து நெளிந்தது, ஓர் அன்புக் குரல்—

"அமுதா......"—ஆவலும், ஆசையும் நிறைந்து வழிந்த அந்தக் குரலைக் கேட்டதும் அமுதனின் சிந்தனைக் கயிறு பட்டென்று அறுந்தது. அவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

அருகிலே—அமுதனின் சிந்தனை தேங்கிய முகத்தையே உற்றுப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் தயாநிதி உயிர் பெற்ற சித்திரத்தின் உருவிலே! அவள் அழகிய மான் கண்களிலிருந்து மாசற்ற அன்பு வழிந்து கொண்டிருந்தது, கண்ணீர்த் துளிகளின் உருவிலே! அவள் கையில் வைத்திருந்த பலகாரங்கள் அருமையான வாசனையை அள்ளி வீசிக்கொண்டிருந்தன, காகிதப் பொட்டல உருவிலே!

"அமுதா! நேத்து ராத்திரி வீட்டை விட்டு ஓடி வந்தவன் இன்னும் வீட்டுக்கே போகலையாமே? உங்க அப்பா உன்னை அடிச்சாராமே? ஏண்டா அடிச்சாரு? முகமெல்லாம் வாடி வதங்கிப் போயிருக்கே! ராத்திரி எங்கே சாப்பிட்டே? எங்கே படுத்தட்டே? உன்னை எங்கெங்கே தேடினேன் தெரியுமா? கடைசியிலே நம்ம சொக்குதான் நீ இருக்கிற இந்த இடத்தைச் சொன்னான். இந்தாடா, இதைச் சாப்பிடு!"—தயாநிதி பலகாரப் பொட்டலத்தை அமுதனின் எதிரில் பாறையின் மீது பிரித்து வைத்தாள்.

மசாலா தோசை மணமணக்கும் பலகாரப் பொட்டலத்தையும், மாசற்ற அன்பு மினுமினுக்கும் தயாநிதியின்

மவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துப் புன்னகை பூத்தான் அமுதன்.

"இந்தா, ஏண்டா இப்படிச் சும்மா சும்மாப் பார்க்கிறே? ரொம்பப் பசியா இருப்பியே! உம்...உம். சாப்பிடு!"

"நான் சாப்பிடுகிறேன். நீ அந்தப் பாறை மேலே உட்காரு!"

தயாநிதி அந்தப் பாறையின் மீது உட்கார்ந்தாள். கால்களைத் தாமரைக் குளத்துப் பன்னீர்த் தண்ணீரில் போட்டு 'டளுக், டுளுக்'கென்று ஆட்டிக்கொண்டே மெல்லச் சிரித்தாள்.

அமுதன், "ரொம்பக் குஷியா யிருக்கே?" என்று கேட்டுக் கொண்டே பாறையின்மீது டக்கென்று ஏறி நின்றான். தலைக்கு மேல் சாய்ந்து தொங்கும் ஆலமரத்துக் கிளையிலிருந்து ஒரு சிறு குச்சியை மளுக்கென்று உடைத்தான். அவசர அவசரமாகப் பல் தேய்க்க ஆரம்பித்தான். இதைக் கண்ட தயாநிதி "ஏண்டா இப்பத்தான் பல் துலக்கிறியா?" என்று கேட்டாள். 'ஆமாம்' என்ற பாவனையில், தலையை ஆட்டினான் அமுதன்.

"டேய் அமுதா நேத்து ராத்திரி உங்க அப்பா உன்னை எதுக்குடா அடிச்சாரு? நீ ஏதாச்சும் இடக்குப் பண்ணினியா?"

தயாநிதியின் கேள்வியைக் கேட்ட அமுதன் சில விநாடிகள் வரைக்கும் மௌனமாயிருந்தான். பிறகு, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுச் சொன்னான் :

"தயா! அதெல்லாம் ஒண்ணும் கேக்காதே தயா! நினைச்சாக்கூட நெஞ்சு குமுறுது! நான் நம்ப சொக்கு கூடச் சிநேகம் பண்றதை யாரோ எங்க அப்பாகிட்டே சொல்லிவிட்டிருக்காங்க. அதுக்காக எங்க அப்பா அடிச்சாரு....

"அப்பா! எதுக்காக என்னை அடிக்கிறீங்கன்னு கேட்டேன்.

"'எதிர்த்தா பேசுறே! மடையா! அவன் என்ன ஜாதி? நாம்ப என்ன ஜாதி? அந்தப் பறக் கழுதைகூட உனக்கு என்னடா சினேகம்'னு மறுபடியும் என்னை அடிக்க வந்தாரு...

"நான் அவர் கையைப் பலமாப் பிடிச்சுட்டு, 'அப்பா! அந்தப் பறக் கழுதைகூட இந்த முதலியார்க் கழுதை சினேகம் பண்ணுக்க என்னப்பா ஆயிடும்? ஜாதி ரெண்டு தானே அப்பா'ன்னு சாந்தமாச் சொன்னேன்...

"அதுக்கு, 'அட ஆசாரத்தைக் கெடுக்க வந்த அனுசாரமே! ஜாதி ரெண்டுன்னு எவன்டா சொன்னவன்'னு கத்தினாரு,...

"அப்பக்கூட நான் தைரியத்தைக் கைவிடாம 'அப்பா' அடிக்காதிங்க! சொல்றதைக் கேளுங்க, 'ஜாதி இரண்டொழிய வேறில்லே'ன்னு ஔவையார்ப் பாட்டி பாடியிருக்காங்க. அப்புறம் நம்ப பாரதியார்கூட 'ஒன்றே குலம்'னு பாடியிருக்காரு. அதுவுமில்லாம, எங்க ஸ்கூல்லே தினந் தினம் இதைத்தானேப்பா போதிக்கிறுங்க'ன்னு ஆவேசமாப் பேசித் தீர்த்தேன். அவ்வளவுதான். எங்க அப்பா என்னைக் கொல்லு கொல்லுன்னு கொன்னுப்பிட்டாரு! நான் இந்தச் சின்ன வயசிலே அதைப்பத்தி யெல்லாம் சிந்திக்கக் கூடாதாம். ஔவையார் பாடிய பாட்டைப் பத்தி நான் சிந்திக்கக் கூடாதாம்! பாரதியார் பாடிய பாட்டைப்பத்தி நான் சிந்திக்கக் கூடாதாம்! பள்ளிக்கூடத்துலே போதிக்கிற பாடக் கருத்துக்களை வாழ்க்கையிலே கடைப்பிடிக்கக் கூடாதாம்! படிக்கிற பாடத்தையெல்லாம் பரீட்சைக் கேள்விக்குப் பதில் எழுதறதோடு நிறுத்திக்கணுமாம்!"—மேலும் மேலும் கனல் பறக்கக் கத்திக்கொண்டேயிருந்த அவன், "அமுதா!" என்ற தயாநிதியின் கூச்சலைக் கேட்டதும் டகாரென்று பேச்சை நிறுத்திக் கொண்டான்.

அவன் உள்ளமும், உடலும், அறிவுக் கனல் தாளாமல் குதித்துப் பதைத்தது! அவன் கண்கள் ரத்தச் சிவப்பாய் உருமாறி ஜொலித்தன!

"டேய் அமுதா! என்னடா உனக்குப் பைத்தியமாப் போச்சு! உம்? இந்த உலகம் இருக்குதே, அது ஒரு சமுத்திரம். அதுலே நீ ஒரு சின்ன மீன் குஞ்சு! உன்னாலே ஏதாச்சும் ஒரு நல்லதைச் செய்துட முடியும்னு நீ நினைச்சாக்க நீ ஒரு அசல் பைத்தியம்தான்! வண்ணான் வீட்டுக் கழுதை கத்தினக்க, நல்ல சகுனம்'னு சந்தோஷப் படுவாங்க. வெண்டைக்காய் அளவு இருக்கிற நீ என்ன தான் புத்திசாலித்தனமாக் கத்தினக்கூட, 'சீ போடா பைத்தியம்'னுதான் கேலி பண்ணுவாங்க. டேய் அமுதா! வேண்டாண்டா இதெல்லாம். எதுக்குடா இந்தப் பொல்லாப்பு எல்லாம்! முட்டாள்தனமா..."

"சீ! அறிவு கெட்ட நாயே! எனக்கா புத்தி சொல்ல வந்துட்டே! யாருடி முட்டாள்? முட்டாள் கழுதை!" என்று கொந்தளித்துக் குமுறும் கருங்கடலாய்ச் சீறிக் கொண்டே தயாநிதியின் ரோஜாக் கன்னத்தில் பளா ரென்றுஓர் அறை கொடுத்தான் அமுதன்!

"ஐயோ! அமுதா!" என்று வீறிட்டுக் கத்திக் கொண்டே பாறையின் மீதிருந்து தடாலென்று கீழே விழுந்து உருண்டாள் தயா!

மறு கணம்—

"இனிமேல் என் பேச்சுக்கு வா. உன் முப்பத் திரண்டு பல்லையும் உடைச்சு உன் மடியிலே கொட்டு றேன்!" என்று கோபக் கொதிப்புடன் அங்கிருந்து விர் ரென்று நடந்தான் அமுதன். அறைபட்டு விழுந்து மூர்ச்சித்துக் கிடக்கும் தயாநிதியைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் விடுவிடென்று நடந்தான். நடந்துகொண்டே இருந்தான்.

நேரம் உருகி மறைந்து கொண்டேயிருந்தது.

அமுதன் ஒரு அரசமரத்தடிக்குப் போனான். அங் கிருந்த ஒரு மலைப் பாறையின்மீது உட்கார்ந்து மரத்தின்

மீது சுகமாய்ச் சாய்ந்து கொண்டான். ஏதோ ஒரு யோசனை. கொஞ்ச தூரத்தில் வான வெளியிலே இரண்டு கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அமுதன் அந்தக் கழுகுகளையே விழியசையாமல் பார்த்தபடி என்னவோ யோசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று—

ரொம்பப் பரபரப்புடன் பாறையினின்று குபீ லென்று எழுந்து நின்ற அமுதன் "ஆ!" என்று வாயைப் பிளந்தான்! ஏன்—?

அமுதனின் கூரிய பார்வைக்கு உள்ளான அந்த வானத்துக்குக் கழுகுகள் திடீரென்று பாய்ந்து பறந் தோடிச் சென்று...அதோ, துர்க்கை கோவிலுக்குப் பக்கத்திலுள்ள பாழடைந்த இரட்டைக் கிணற்றில் ஒன்றினுள் குபீர் குபீரென்று புகுந்து மறைந்து விட்டன!

அமுதன் அந்தப் பாழுங் கிணற்றை நோக்கி நடந் தான். ஆச்சரியமும் அதிசயமும் உந்தித்தள்ள வேகமாய் நடந்தான்.

கொஞ்ச நேரத்திற்குள்—

அமுதன் அந்தக் கிணற்றண்டை வந்தான். கிணற்றுச் சுவர் விளிம்பில் சாய்ந்து நின்று கிணற்றுக் குள் எட்டிப் பார்த்தான்.

கிணற்றுக்குள் கழுகளைக் காணோம்!

அமுதனுக்கு ஒரே...ஆச்சரியம்! ஒரே...அதிசயம்! அவன் விழித்தான். பரக்கப் பரக்க விழித்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அமுதன், சேறும் சகதியும் கொப்புளிக்கும் அந்தப் பாழுங்கிணற்று அடித் தளத்தையே உற்றுப் பார்த்தபடி நின்றான்.

"உம்ம்...விம்ல்...!"—திடீரென்று கிணற்றின் அடித் தளத்திலிருந்து ரீங்காரமிட்டது இந்தக் கூச்சல்!

அமுதன் திடுக்கிட்டான். மறுபடியும் கிணற்றுக்குள் சாய்ந்து உற்றுப் பார்த்தான்.

கழுகுகளைக் காணோம்!

ஆனால்—அந்தச் சப்தம் மட்டும் மீண்டும் கும்மாளி யிட்டது!

அமுதன் என்னவோ யோசித்தான். தீவிரமாக யோசித்தான். எதற்கும், எப்பொழுதும், எவருக்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்த அமுதன் என்ன முடிவுக்கு வந்தானோ! பரபரவென்று சட்டையைக் கழற்றினான். கிணற்றுச் சுவர் விளிம்பின் மீது வைத்தான். முண்டாப் பனியனை இழுத்து விட்டுக்கொண்டே போனான். அந்தப் பாழும் கிணற்றின் ஓட்டைப் படிகளின் வழியாக மெல்ல மெல்லக் கிணற்றிற்குள் இறங்கினான். கிணற்றின் அடித்தளத்தை நோக்கி முன்னேற முன்னேற...உயிரைப் புல்லரிக்கச் செய்யும் ஒரே...நாற்றம்! துர்நாற்றம்! அம்மம்மா! சகிக்க முடியாத நாற்றம்!

சில நிமிஷ நேரத்துக்குள்—

அமுதன், கால் சட்டைப் பைக்குள்ளிருந்த கைக் குட்டையை எடுத்து மூச்சை இறுக்க அழுத்திப் பிடித்துக் கொண்டே கிணற்றின் அடித்தளத்திற்கு வந்தான். கொட்டு கொட்டென்று கொட்டும் வியர்வையை கைக் குட்டையால் துடைத்து விட்டுக் கொண்டே பார்த்தான்.

அங்கே—

அந்தக் கிணற்றடியில் பக்கத்தில் உள்ள மற்றொரு கிணற்றிற்குப் போகும் சிறு சுரங்கம் போன்ற ஒரு கால்வாய் பக்கவாட்டமாய் அமைந்திருந்தது. அந்த இரட்டைக் கிணற்றின் இடையே அந்தக் கால்வாயின் நடுவே—கொத கொதவென்ற சேற்றிலே, பயங்கரமான—சுமார் நான்கடி நீளமுள்ள—ஒரு வேட்டை நாய் செத்துச்

சீரழிந்து, ரத்தமும், சதையுமாய், எலும்பும் தோலுமாய்க் கிடந்தது! அதன் வயிற்றின் மீது உட்கார்ந்து அதைக் கொத்திக் கொத்தி இழுத்துக் கிழித்துத் தின்று கொண்டிருந்தன அந்தக் கழுகுகள்!

"இதென்னடாப்பா, படு பயங்கரமாயிருக்கே! இந்த வேட்டை நாய் இந்த இடத்துக்கு எப்படி வந்திருக்கும்! யாராவது சாகடிச்சுப் போட்டிருப்பார்களோ? உம்...நாயைப் பார்த்தாக்க பெரிய இடத்து நாய் மாதிரி இருக்கே! அதோ! அதன் கழுத்துலே என்னமோ பளபளக்குதே! என்னது? உம்..."—செத்துக் கிடந்த நாயின் கழுத்தில் பளபளத்த ஏதோ ஒன்றைக் கண்டு விட்ட அமுதன், அந்த நாயின்மீது உட்கார்ந்து அந்த நாயைத் தின்று கொண்டிருந்த கழுகுகளை விரட்டினான்.

"உஷ்! ஹோய்ய்...!"

திடுக்கிட்டுப் பயந்து சிறகடித்துப் பறந்து, பக்கத்துக் கிணற்று வழியே வெளியே பாய்ந்து மறைந்தோடிப் போயின கழுகுகள்!

பிறகு—அமுதன் மெல்லச் சேற்றிலே காலை வைத்துப் படிகளின் மீதிருந்து இறங்கினான்.

'ளக், மளக், டபக், டப்'......முழங்கால் அளவு சேற்றிலே அடிமேல் அடி எடுத்து வைத்து அந்த நாயின் அருகில் வந்தான். அந்த நாயைப் பார்த்தான்.

அந்த நாயின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த வார்ப் பட்டையில் பளபளத்த சிறு வெள்ளித் தகட்டை— அந்தத் தகட்டில் எழுதியிருந்த இரண்டு எழுத்துக்களைப் பார்த்தான்.

"ராஜா"—அந்தத் தகட்டில் பொறித்திருந்த இரண்டு எழுத்துக்களைக் கூட்டி முணுமுணுத்த அமுதன், அந்த நாயின் பக்கத்திலே சேறில் புதைந்து கிடந்த மற்றொரு பொருளையும் எப்படியோ கவனித்து விட்டான்!

அது என்ன பொருள்?



## இரண்டாம் அத்தியாயம்

அமுதன் அதை எடுத்தான். அது ஒரு குத்துக் கத்தி! அமுதன் அதைப் பார்த்தான். அந்தக் குத்துக் கத்தியின் கைப்பிடியில் அப்பிக் கொண்டிருந்த சேற்றில் மறைந்ததும் மறையாததுமாய்த் தெரிந்தன இரண்டு எழுத்துகள்.

அது என்ன எழுத்து. அமுதன் சேற்றைத் துடைத்து விட்டுப் பார்த்தான்.

அந்தக் கத்தியின் கைப்பிடியில் நாநா என்றிருந்தது.

"ராஜா! நாநா...ம்!..."—முணு முணுத்தபடியே கண்ணின் கருவிழியை மேலேற்றி என்னவோ யோசித்தான், அமுதன்.

அந்தச் சமயத்தில்—

அமுதனின் காதுகளில் எங்கிருந்தோ—யாரோ—எவரோ—வீறிட்டு அலறுவது மிகத் துல்லியமாய்க் கேட்டது!

"அமுதா! ஓ......அமுதா......! ஐயோ! இங்கே ஓடிவாயேன்!"

அமுதன் திடுக்கிட்டான். திகைத்தான்; திக்பிரமை யடைந்தான்; ஸ்தம்பித்து நின்றான். ரத்தமும் சதையுமாய்ச் செத்து நாறிக்கிடந்த நாயைப் பார்த்துக் கொண்டே, கிணற்றிற்கு வெளியே எங்கிருந்தோ மிகத் துல்லியமாய்த் தவழ்ந்து வந்த மெல்லிய குரலை மறுபடியும் காதைத் தீட்டிக்கொண்டு உற்றுக் கேட்டான்.

"டேய்...அமுதா! எங்கேடா யிருக்கே! டேய்ய்...! ஆ! ஐயோ! கரடி மரத்துமேலே ஏறிவருதே! ஐயோ! டேய்! ஓ...!"—மீண்டும் மீண்டும் கேட்ட அந்த அலறலை—உயிர்க் கூச்சலை—உற்றுக் கேட்டுக் கவனித்த அமுதனுக்கு, அப்படி வீறிட்டுக் கத்துவது யாரென்று தெரிந்துவிட்டது! யார் அது?

தயாநிதியாய் இருக்குமோ?

அமுதன் ஒரு வினாடிகூடத் தாமதிக்கவில்லை! அவன் அந்தக் கத்தியை எடுத்துக் கொண்டு மேலே ஏறி ஓடினான்.

கொஞ்ச தூரத்திலே—துர்க்கைக் கோவிலுக்குக் கொஞ்ச தூரத்திலுள்ள சுடுகாட்டு மதில் சுவருக்குப் பக்கத்திலே ஒரு மரம்; மகா பெரிய—வானமளாவிய அரச மரம். அந்த மரத்தில் ஒரு சிறு கிளையிலே—கிளையோடு கிளையாகக் கவ்வியணைத்துத் தொத்திக் கொண்டிருந்தான் சொக்கு. அவன் அந்தச் சுடுகாட்டு வெட்டியானின் அருமை மகன். அமுதனின் ஆருயிர் நண்பன்! கிளையில் தொத்திக்கொண்டு உயிர்க் கூச்சலிடும் சொக்குவைப் பார்த்து, "சொர்ர்...புர்ர்" ரென்று பயங்கரமாய் உறுமியபடி அந்த அரச மரத்தடியில் இரண்டு காலில் நின்று கொண்டிருந்தது ஒரு கரடி. பயங்கரக் கரடி!

அது தமிழோங்கி புரத்திற்கு வெகு தூரத்திலுள்ள அபரஞ்சி வனத்திலிருந்து எப்படியோ அங்கு வந்து விட்டிருந்தது!

அமுதன் அரச மரத்தண்டை வந்ததும் டக்கென்று நின்ருன்.

அப்போதுதான் மரக் கிளையில் தொத்தியபடி உயிர் நடுங்கிக் கொண்டிருந்த சொக்குவை நோக்கி மரத்தின் மீது ஏற முயற்சித்த கரடியைப் பார்த்தான். "ஹோய்ய்...ஹாய்ய்!" என்று கூச்சலிட்டுக்கொண்டே கீழே கிடந்த மலைக் கற்களை வாரி வாரிக் கரடியின்மீது வீசி எறிய ஆரம்பித்தான் அமுதன்.

கரடியின் முதுகிலும், மண்டையிலும் 'மட்! பட்!' டென்று கல்லடிமேல் கல்லடியாய் விழுந்தன! மரத்தின் மீது ஏறிய கரடி கல்லடி விழுந்ததும் அப்படியே முதுகுப் புறமாகத் தொப்பென்று கீழே விழுந்தது. குபீரென்று எழுந்தது! "உர்ர்...புர்ர்...!" என்று பயங்கரமாய்க் கர்ஜித்துக் கொண்டே திரும்பி, சற்று தூரத்தில் நின்று இன்னும்கூடக் கல்லடிப் பிரயோகம் செய்யும் அமுதனைக் கண்டதும்......

"ஹாஹ்ஹார்ர்ர்...!"—அந்தப் பிரதேசமே கிடு கிடுக்கும்படியாய் உறுமிக்கொண்டே அமுதனை நோக்கிப் பாய்ந்தோடியது அந்தப் பயங்கரக் கரடி!

அமுதன் அஞ்சா நெஞ்சத்துடன் கூர் நிரம்பிய குத்துக் கத்தியால் கரடியின் கண்களைப் பார்த்து நச்சக் கென்று குத்தினன்?

கரடி முன்னங் கால்களால் கண்ணைத் தேய்த்தபடி துடித்தது; பதைத்தது; குதித்தது! மறுகணம்—ஆ! என்ன பயங்கரம்!

கொடகொடவென்று கண்ணிலிருந்து ரத்தமாய்க் கொட்டுவதைக் கண்ட கரடிக்குப் பயங்கரமான கோபம்! வெறி! அது சரேலென்று அமுதனின் மீது பாய்ந்தது, மகா பயங்கரமாய்க் கர்ஜித்துக்கொண்டே!

"மடேர் !"—மகா மூர்க்கத்தனமான ஒரு பேரடி !

அமுதனைக் கவ்வியணைத்துக் கடித்துக் கொதறவிருந்த கரடி மண்டையில் விழுந்த திடீர் அடியின் வலி பொறுக்க மாட்டாமல் அமுதனை விட்டு விட்டு ஒரு துள்ளுத் துள்ளித் திரும்பிப் பார்த்தது.

முறித்து ஒடித்த அரசமரத்துக் காய்ந்து போன கிளையும் கையுமாய்க் குரூரமாய்—வீரனாய்—தீரனாய்—சூரனாய்—நின்றுகொண்டிருந்தான் சொக்கு !

"ஹூ-ஊஹூ-ஊஹூ-ஊஹ...!" என்று வெறிக் கூச்சல் போட்டுக்கொண்டே சொக்குவின் மீது குபீரென்று பாய்ந்தது கரடி ! அதன், கண்ணிலிருந்தும், மண்டையி லிருந்தும் ரத்தமாய் ரத்தம்—சும்மா குபுகுபுவென்று கொட்டிக் கொண்டேயிருந்தது.

மறு விநாடி—

சொக்குவின்மீது பாய்ந்த கரடியின் விலாப்புறத்தில் ஒரு கத்திக் குத்து !

கரடி வீறிட்டுக் கத்திக் கொண்டே சடாரென்று திரும்பியது. அதன் விலாப்புறத்திலிருந்து பொலபொல வென்று கொட்டும் ரத்தத்தையே பார்த்தபடி, பச்சை ரத்தம் தோய்ந்த பளபளக்கும் குத்துக் கத்தியை நீட்டிப் பிடித்தபடி வீரனாய் நின்றுகொண்டிருந்தான் அமுதன் !

கரடி பயங்கரமாய் உறுமிக் கொண்டே அமுதனின் மீது பாய்ந்த மறு விநாடியே—படாரென்று ஓர் அடி !

கரடி, சோர்ந்துபோய் மெல்லத் திரும்பியது.

'சக் !'—ஒரு கத்திக் குத்து !

'பட் !'—ஒரு தடியடி ! இப்படியே கத்திக் குத்தும் தடியடியும் மாறிமாறி விழுந்து கொண்டே யிருந்தன.

சில நிமிஷங்களுக்குள்—

**கரடி அண்ணன் கயா ஆகிவிட்டார்! ஹோகயா!**

"ஹே! நம்பகிட்டேயா நடக்கும்!" என்று வீரம் வழியக் கொக்கரித்துக்கொண்டே கையிலிருந்த மரக்கிளையைக் கீழே போட்டுவிட்டு, மண்ணிலே, ரத்தச் சேற்றிலே சுருண்டு விழுந்து கிடக்கும் கரடியைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டான் சொக்கு.

"உன்னாலே நான் தப்பிச்சேன். என்னாலே நீ தப்பிச்சே! நல்ல வேளை!" என்று சொக்குவைப் பார்த்துச் சிரித்தான் அமுதன். அமுதனின் கையில் ரத்தக் கறையுடனிருந்த குத்துக் கத்தியைக் கண்ட சொக்கு "டேய் அமுதா! இந்த கத்தி ஏதுடா? மிலிடெரி கத்தி போல இருக்குதே!" என்று வாயைப் பிளந்தான்.

"இதுவா? வா, சொல்றேன்" என்று திரும்பினான் அமுதன்.

"இந்தக்கரடி........." என்று இழுத்தான் சொக்கு.

"அது கிடக்கட்டும், வாடா" என்றான் அமுதன்.

"நம்ப ஜமீந்தார்கிட்டே சொன்னாக்க பரிசு..." என்று ஆசையாய்ச் சொன்னான் சொக்கு.

"பரிசும்...மண்ணாங்கட்டியும்! வாடா, அந்தத் தாமரைக்குளத்..."—மேலும் என்னவோ சொல்ல வாயைத் திறந்த அமுதனுக்கு தாமரைக் குளத்தண்டை மூர்ச்சையாய் விழுந்த தயாநிதியின் ஞாபகம் சடக்கென்று தோன்றவே, "டேய் சொக்கு! தாமரைக் குளத் தண்டை தயாவைப் பார்த்தியா?" என்று ரொம்பப் பரபரப்புடன் கேட்டான்.

"உம், எல்லாம் பார்த்தேன். உன்னுடைய முரட்டுத்தனத்தை யெல்லாம் சொன்னாள். கேட்டுக்கிட்டே வரச்சேதான் இந்தக் கரடி ஐயா வந்தார். நான் மரத்து மேலே ஏறிக்கிட்டேன். அவள் ஊரை நோக்கி ஓடினாள். இன்னும்..."—சொக்கு தமிழோங்கிபுரத்துக் கிராமத்தைப் பார்த்தான்.

கிராமத்திலிருந்து ஓர் ஆடு மாடுகூட வெளித் தெரியவில்லை!

இருவரும் தமாஷாய்ப் பேசிக் கொண்டே கொஞ்ச நேரத்திற்குள் கிராமத்துப் பிள்ளையார் கோவில் அருகில் போய்க்கொண்டிருந்தார்கள்.

"அமுதா! டேய்...!"—திடீரென்று ஒரு குரல்!

அமுதனும் சொக்குவும் சடக்கென்று திரும்பிப் பார்த்தார்கள். அமுதனின் பள்ளிக்கூடத் தோழனான ஜயந்தன் அவர்களிடம் ஓடோடியும் வந்தான். இளைக்க இளைக்க ஓடி வந்தான். அமுதனின் தோள்மீது கையைப் போட்டு அணைத்தபடி நிற்கும் சொக்குவைக் கண்டதும் ஜயந்தன் கொஞ்சம் தூரமாகவே நின்றான்.

"டேய், அமுதா! உன்னை ஏதோ ஒரு கரடி துரத்தி வந்ததாமே! நம்ப தயாநிதி ஊரையே புரட்டிக்கினு போயிருக்காளே!" என்று மூசு மூசு என்று இளைக்க ஆச்சரியத்துடன் சொன்னான் ஜயந்தன். ஜயந்தன் சொன்னதைக் கேட்ட சொக்குவுக்கு ஒன்றும் புரிய வில்லை. பின்னே? தயாநிதியும் சொக்குவும் அமுதனைத் தேடிச் சென்ற போதுதானே கரடி வந்தது? அவள் ஊரிலே போய் 'அமுதனைக் கரடி துரத்துகிறது' என்று ஏன் மாற்றிச் சொல்லவேண்டும்?

"உம்...இந்த வெட்டியான் மகனைக் கரடி; புலி, சிங்கம் ஒன்று துரத்துகிறது அல்லது கொன்றே விட்டது என்று கத்தினாலும் யார் வரப்போகிறார்கள்? தயாநிதி புத்திசாலிதான். எனக்காக அமுதனை இழுத்துக்கொண் டிருக்கிறாள் ..."—இப்படி என்னவெல்லாமோ எண்ணிய சொக்கு, ஜயந்தனைப் பார்த்து "நாங்க அந்தக் கரடியைக் குளோஸ் பண்ணிப்பிட்டோம்!" என்று கம்பீரமாய்ச் சொன்னான்.

சொக்கு தன்னுடன் பேசுவதைக் கண்ட ஜயந் தனுக்கு திடீர்க் கோபம் குமுறியது!

"சீ! பறநாயே! உங்கிட்ட யாருடா பேசினது? நான் அமுதனிடந்தானே பேசினேன். நான்சென்ஸ்!" என்று சொக்குவைப் பார்த்துச் சீறிவிட்டு, ஜயந்தன் ரொம்ப ஆத்திரமாக அமுதனைப் பார்த்தான்.

ஜயந்தனின் முட்டாள் தனமான பேச்சைக் கேட்டதும் அமுதனின் உள்ளத்தில் முடங்கிக் கிடந்த பகுத்தறிவு குபீரென்று எரிமலையாய் வெடித்தது! கொந்தளித்துக் குமுறும் கருங்கடலாய்க் கொப்பளித்தது! வெகுண்டெழுந்து வீறிட்டடிக்கும் சூறுவளியாய்ச் சீறிற்று!

"ஏ! அறிவு கெட்ட நாயே! மனித குலத்துப் பெருமையை அரிக்க வந்த செல்லுப் பூச்சியே! எவண்டா தீண்டப்படாதவன்? நச்சுப்பல் நாகம் தீண்டப்படாதது! உடலைப் பொசுக்கும் நெருப்பு தீண்டப்படாதது! அண்டிணுக்க அணைத்துக் கொள்ளும் ரோகம் தீண்டப்படாதது! உனக்காக—இந்த உலகத்துக்காக—உழைத்து உழைத்து ஓடாய்த் தேயும் உழைப்பவனின் மகனான இவன்—என் சிநேகிதன்—ஏண்டா தீண்டப்படாதவன்? எதுக்குடா தீண்டக்கூடாது? கேடு கெட்ட கழுதே!"—அறிவுக் கனல் பறக்க ஆவேசமாய்க் கூவிய அமுதன், ஜயந்தனின் கன்னத்தில் வெறித்தனமாய்ப் பகாரென்று ஒரு குத்து விட்டான்!

"ஐயோ!" என்று கூவியபடி கன்னத்தைப்பிடித்துக் கொண்டு தடார் என்று கீழே விழுந்தான் ஜயந்தன்

அதே சமயத்தில்—

"அடப்பாவி! ஏனடா அப்படிப் பேய்த்தனமா அடிக்கறே!" என்று அலறிக்கொண்டே அங்கு தாவியோடி வந்தார், அமுதனின் பள்ளிக்கூடத்துத் தமிழ் வாத்தியார். கீழே விழுந்து கிடந்த ஜயந்தனை வாரியெடுத்தார். அவன் வாயிலிருந்து ரத்தம் கசிந்திருந்தது.

"ஜயந்தா, ஏண்டா அடிச்சான்?"

"இல்லே சார். இதோ, இந்தப் பறப்பயல்கூட ஏண்டா சிநேகம் பண்றேன்னு கேட்டேன். அதுக்கு..."—ஜயந்தன் விசித்து அழுதான். வாத்தியார் அமுதனையும், அவன் பக்கத்தில் நடுக்கத்துடன் நிற்கும் சொக்குவையும் பார்த்தார்.

"டேய் அமுதா! உனக்கு எவ்வளவு திமிருடா! இந்தப் பறக்கழுதையோடு கூடிண்டு ஆர்ப்பாட்டமா பண்றே? இரு இரு! உங்க அப்பாருகிட்டே சொல்லி..." —வாத்தியார் மேலும் என்னவோ சொல்லுவதற்குள் அமுதன் சடாரென்று இடை மறித்தான்!

"வாத்தியார் சார்! என்ன சார். நீங்களே இப்படிப் பேசுறீங்களே! ஸ்கூல்லே சாதியிரண்டொழிய வேறில்லேன்னு போதிக்கிறீங்க! இப்ப வீதியிலே வந்தாக்க, சாதி பிரித்துப் பேசி நீதி சொல்ல வந்துட்டீங்களே! வாத்தியார் சார்! இது நியாயமா? இது உங்களுக்குத் தகுமா? வாத்தியார் சார்! உங்களுடைய உள்ளம் இப்பத்தான் தெரியுது! வெறும் கூலிக்காக மாரடிக்கிறீங்கன்னு இப்பத்தான் தெரிஞ்சுட்டேன்! சார்! நீங்க ஒரு தாழை மடல்! நீங்க படித்தும் பயனில்லே! பருத்தும் பயனில்லே; ஓஹ்ஹோஹோ! ஹீஹ்ஹீ...!"—அமுதன் சிரித்தான். அந்தப் பிள்ளையார் கோவில் வீதியே நடுநடுங்கும்படியாய்ச் சிரித்தான்!

ஒரே...வெறிச் சிரிப்பு!

ஆ! அமுதனுக்குப் பைத்தியம்...?



## மூன்றாம் அத்தியாயம்

அமுதனின் ஆவேசமான திடீர்ச் சிரிப்பைக் கண்ட வாத்தியார், ஜயந்தன், சொக்கு மூவரும் பரக்கப் பரக்க விழித்தார்கள்.

அதே சமயத்தில்—

"ஐயோ, அமுதா! உனக்குப் பைத்தியமா?" என்று ஒரு கூச்சல்!

அமுதன் உள்பட எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அமுதனின் அப்பா, தயாநிதி, இன்னும் அந்த ஊரார்களில் ஒரு சிலர் எல்லோரும் தீவட்டியும் கையுமாய்க் கிஜுகிஜு வென்று பறந்தோடி வந்தார்கள்!

மறுகணம்—

"ஓஹ்ஹோ! ஹோ ஹோ...!"—வயிறு குலுங்கச் சிரித்துக் கொண்டே அங்கிருந்து புயலாய்ப் பாய்ந்தோடினான் அமுதன்! அவனைத் தொடர்ந்து, கரடியை எதிர்க்கப் போய்ச் செத்துக் கிடக்கும் கரடியைக் கண்டு ஏமாந்து திரும்பிய அமுதனின் அப்பா, தயாநிதி, இன்னும்

கூட வந்தவர்களுடன் வாத்தியார், ஜயந்தன் எல்லோரும் சேர்ந்து கொண்டு அமுதனைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள்!

சொக்கு, அந்தப் பிள்ளையார் கோவில் வாசலிலே தனியாக நின்றான். அமுதனைத் துரத்திக் கொண்டோடும் கும்பலை நோக்கி ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு மெல்லத் திரும்பினான். கோவில் உள்ளே தொந்தியைப் போட்டுக்கொண்டு பணிய அமர்ந்து கிடக்கும் பிள்ளை யாரை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டு வேண்டினான்:

"ஓ...தெய்வமே! மனிதனை மனிதன் இழிச்சுப் பேசும் இந்தப் பாவ உலகத்திலே என்னை ஒரு நாய்ப் பிறவியாய் மாத்திடேன்!"

வெகு நேரமாயிற்று.

பிள்ளையார் கோவில் வாசலில் தன்னை மறந்து கையெடுத்துக் கும்பிட்டுத் தலை குனிந்து வணங்கிக் கொண்டிருந்த சொக்குத் தம்பி தலை நிமிர்ந்தான்.

அவ்வளவுதான்! அடுத்த விநாடி—!

"இந்தப் படுபாவிப் பறப் பயலாலே என் கண்மணிக் குப் பைத்தியம் பிடிச்சுப் போச்சே! என் அருமை மகன் எங்கேயோ கண்காணாமெ ஓடிப் போயிட்டானே! உம்! இந்த நாசகாரப் பாவி மகனை நசுக்குங்க!"

"இந்தக் கேடுகெட்ட பறக் கழுதையை இப்படியே சும்மா சும்மா விட்டுண்டே வந்தாக்க இன்னும் இருக்கிற பிள்ளைங்களை யெல்லாம் கெடுத்துண்டே வருவான்! உம்! போடுங்க, ஆளுக்கு ஒண்ணு!"—

"முதுகெலும்பை நொறுக்கித் தள்ளுங்க!"

தமிழோங்கிபுரத்துச் சந்து பொந்துகளில் புகுந் தோடி மறைந்த அமுதனைப் பிடிக்க முடியாமல் ஏமாந்து மனமிடிந்த அமுதனின் அப்பா, அவருடன் வந்த தயாநிதியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அந்த

ஏழைத் தம்பி சொக்குவின் மீது திடீரென்று பாயும் புலியாய்—சீறும் சிங்கமாய்—குபீர் குபீரென்று பாய்ந்து,

ஐயோ, என்ன கோரம்!

ஓ...மனிதத் தன்மையற்ற மிருகங்களே! ஒரு சின்னஞ் சிறு பையனை இத்தனை பேர் கூடிக்கொண்டு இப்படி வதைக்கிறீர்களே! ஆ! அதோ, ஒரு முரட்டு மனிதன் தன் கைத் தடியால் மூர்க்கத்தனமாய் அந்தச் சிறுவனைத் தாக்குகிறானே! ஐயோ! அந்தச் சிறுவனின் விலாவெலும்பு நொறுங்கி முறியும் மளமளவென்ற சப்தம் கணகணவென்ற நெருப்புக் கம்பியைக் காதில் நுழைப்பதுபோல் பாய்கிறதே!

ஓ...தெய்வமே! இதென்ன அநியாயம்! இதென்ன அக்கிரமம்!

அந்தோ! அந்தச் சிறுவன் வெறியர்களின் பேய்த் தாக்குதலைத் தாளாமல் தட்டுத் தடுமாறி வீரிட்டுக் கத்திக் கதறித் தொப்பென்று கீழே விழுந்து மூர்ச்சிக்கிறான். வெறி தணிந்த ஜனங்கள் வெற்றியுடன் முணு முணுத்துக் கொண்டே அங்கிருந்து நகருகிறார்கள். இத்தனை நேரமும் இந்தக் குரூரமான காட்சியைக் கண்டு செய்வது இன்னதென்று அறியாமல், உயிரும் உடலும் கிடுகிடுவென்று நடுநடுங்க ஸ்தம்பித்து நின்ற தயாநிதி...

அவள், தமிழோங்கிபுரத்துச் சுடுகாட்டின் ஒரு மூலையிலுள்ள சொக்குவின் குடிசையை நோக்கிச் சிட்டாய்ப் பறந்தாள்!

கொஞ்ச நேரத்திற்குள்—

"ஐயோ, மகனே!" என்று உயிர் குலுங்கக் கூவிக் கொண்டே புயலாய்ப் பாய்ந்தோடி வந்தான் சொக்குவின் அப்பா—வெட்டியான் வீராசாமி!

பிள்ளையார் கோவில் வாசலில் ரத்தக் காய, ரண காயங்களுடன் பிணம்போல வீழ்ந்து கிடக்கும் சொக்குவின் அருகில் வந்தான். சொக்குவின்மீது விழுந்து

கதறிக் கதறி அழுதான். "ஓ ஓ," வென்று ஓலமிட்டான். வெகு நேரமாக விசித்து விசித்து அழுதான்.

கொஞ்ச நேரம் ஊர்ந்தது.

வீராசாமி ரத்தச் சேற்றில் விழுந்து கிடந்த தன் கண்ணுன மகன் சொக்குவை இரண்டு கைகளாலும் வாரியெடுத்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அவனைச் சூழ்ந்து ஒரு மனிதப் பழத்தைக்கூடக் காணோம். அவனைச் சூழ்ந்து கிடந்த மனிதப் பிஞ்சுகள்—தம்பி, தங்கைகள்—வீராசாமியையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீராசாமி, சடாரென்று திரும்பினன். தமிழ்நோங்கி புரத்து வீதிகளைப் பார்த்தான். அவன் உடலில் பாய்ந்த ரத்தம் சூடேறிக் கொதித்தது! குமுறியது!

"அட, நன்றி கெட்ட பாவிகளா! நீங்க செத்து நாறிப் போகாம இருக்க உங்களைக் குழி வெட்டிப் புதைக்கிறேனே! அந்த நன்றியைக்கூட நெனைச்சுப் பாக்கலியே! அட, ஜாதி வெறி பிடிச்ச மிருக ஜனங்களே! என் ஒரே மகனை வீணு அடிச்சுப் போட்டீங்களே; நியாயமா உங்களுக்கு? நீங்க செத்துச் சுடுகாட்டுக்கு வந்தாக்க நான் உங்களைத் தூக்கிக் குழியிலே வைக்கிறப்போ உங்க ஜாதி எங்கேடா போச்சு? அட மனுஷப் பிசாசுங்களே! நீங்க நல்லாயிருப்பீங்களா? உங்களை வெட்டிக் கூறுபோட்டு மஞ்சாத் துணியிலே மறைச்சுப் போக!" என்று எரிமலையாய்க் குமுறிக் கொண்டே அங்கிருந்து சுடுகாட்டை நோக்கித் தள்ளாடி நடந்தான் வெட்டியான் வீராசாமி.

தன் அருமை மகன் சொக்குவைத் தூக்கிக்கொண்டு வெட்டியான் வீராசாமி, சுடுகாட்டிற்குள் நுழைந்தான். குடிசையண்டை வந்தான். மெல்லக் குனிந்தான். குடிசைக்குள் நுழைந்தான். கந்தல் கந்தலாய்க் கிழிந்த ஓலைப் பாயைக் காலால் உருட்டித் தள்ளி விரித்தான். சொக்குவைப் பாயின்மீது கிடத்தினன். அவனுக்குத் தெரிந்த ஏழை வைத்தியர் கருப்பண்ணசாமி பெரிய மனசு

வைத்துத் தந்த பச்சிலையை மடியிலிருந்து எடுத்தான். தண்ணீரில் கசக்கிப் பிழிந்து, சொக்குவின் விலாப்புறத்தில் வைத்து, தன் மேல் துண்டைப் போட்டு வைத்தியர் சொல்லியபடி இறுகக் கட்டினன். பிறகு கொஞ்ச நேரம் வரைக்கும் அழுதான். தேம்பித் தேம்பி, கதறிக் கதறி அழுதான். பிறகு வாசலில் கிடந்த மண் வெட்டியை எடுத்துக் கொண்டான். துக்கமாய்க் கனவியிருக்கும் உள்ளத்தைத் துடைக்க முடியாமல், கண்ணில் வழியும் கண்ணீரை மட்டும் துடைத்துக்கொண்டு வேலையைக் கவனிக்க வெளியே போனுன்!

நேரம்—உருண்டது, புரண்டது, ஊர்ந்தது, நகர்ந்தது, ஓடியது!

மாலைச் சூரியன் மங்கிக் கொண்டிருந்தான்.

வேலைக்குப் போன வீராசாமி, இன்னும் வீடு வந்து சேரவில்லை.

"சொக்கு!" என்று ஆவலும் அன்பும் துள்ளிக் குதிக்கக் கூப்பிட்டுக் கொண்டே, குடிசைக்குள் நுழைந்தாள் தயா. குடிசையின் ஒரு மூலையில் கந்தல் துணியால் உடல் முழுக்கப் போர்த்திப் படுத்து விறைத்துக் கொண்டிருக்கும் சொக்குவின் அருகில் போனுள். உட்கார்ந்தாள்.

"சொக்கு!"

பதிலில்லை!

தயா, கொண்டுவந்த பலகாரப் பொட்டலத்தைப் பக்கத்தில் வைத்தாள். சொக்குவை நெருங்கினுள். சொக்குவின் முகத்தை மூடிக் கிடந்த துணியை மெல்ல விலக்கினுள். பார்த்தாள். "சொக்கு...!" என்று ஆசையாய்க் கூப்பிட்டுக் கொண்டே பார்த்தாள்.

சொக்குவின் வாய்க் கடையில் சிற்றெறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தது!

மறு வினடி—

"ஐயோ! போயிட்டியா சொக்கு!"—குடிசையே கிடுகிடுக்கும்படியாய் வீறிட்டுக் கதறினாள் தயா.

அப்புறம்—?

இரவு ஏழு மணி!

அறிவு கெட்ட ஜனங்களின் வெறி பிடித்த மூர்க்கத்திற்குப் பலியான சொக்குத் தம்பிக்காகக் கொண்டுவந்த பலகாரப் பொட்டலத்தை எடுத்துக்கொண்டு ரொம்ப வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தாள் தயா.

எங்கே போய்க் கொண்டிருந்தாள்?

சொல்லுகிறேன்.

தமிழோங்கிபுரத்தின் வட எல்லைக்குச் சுமார் மூன்று மைல்களுக்கு அப்பால், மகா சமுத்திரம் போன்ற ஒரு பெரிய ஏரி: அந்த ஏரியில் வருஷத்தில் மூன்று மாதங்களுக்கு—அதாவது மழைகாலத்தில்தான்—நீர் நிறைந்து பொங்கும். மற்ற ஒன்பது மாதங்களும்—நீர் வறண்டு கிடக்கும். ஒரே...மணல் காடாய்க் கிடக்கும்!

இப்போதும்—இந்த மண்டை வெடிக்கும் கோடை காலத்திலும், அந்த ஏரி ஒரே பாலைவனமாய்க் காட்சியளித்தது! அந்த ஏரியில் இந்த ஏழு மணி இரவிலே தன்னந்தனியாகத் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தாள் தயா.

இத்தனை நேரமும் பளீரென்று காய்ந்து கொண்டிருந்த பூரண சந்திரன் குப்பென்று ஊர்ந்து வந்த கருமேகப் படலங்களால் மறைக்கப்பட்டான்!

கப்பென்று எங்கும் இருள் கவ்விய மறு விநாடியே—

"ஓஹிஹோய்ய்...! உம், சுட்டுப் பொசுக்கு"!—திடீரென்று ஒரு பயங்கர அலறல்! இந்தத் திடீர்க் கூச்சலைக் கேட்ட தயாநிதி திடுக்கிட்டாள். திடுக்கிட்டு நடுங்கினாள். நடுங்கித் திரும்பினாள். திரும்பிப் பார்த்தாள்.

கொஞ்ச தூரத்திலே ஒரு சிறு மணல்மேடு. அந்த மணல் மேட்டில் ஓர் இருள் உருவம் நின்று கொண்டிருந்தது! அது, தனது இரு கைகளை வானத்தை நோக்கி நீட்டி விரித்துப் பிடித்து, "ஹோய்! உம், கொளுத்து! சாம்பலாக்கு! சமாதி கட்டு! உம், சுடு! சுடு!" என்று மிகக் குரூரமாய்க் கூவிக் கொண்டிருந்தது!

அந்த இருள் உருவத்தைக் கண்ட தயாநிதிக்கு உயிர் ஒடுங்கியது! உடல் நடுங்கியது! குப்பென்று வியர்த்துக் கொட்டியது!

மறு கணம்—

"ஐயோ, அம்மா!" என்று தயா கூவிக் குதித்து அங்கிருந்து காற்ருய்ப் பறந்தோடினுள்! கையிலிருந்த பலகாரப் பொட்டலம் கை நழுவி விழுந்ததுகூடத் தெரியாமல் ஒரே ஓட்டமாய் ஓடி இருளிலே மறைந்து போனுள் அவள்!

மணற்காட்டில் மயானத்து அமைதி சூழ்ந்தது!

சிறிது நேரம் கரைந்த பின்—

அறிவு கிறு கிறுக்கக் கண்டதை உளறிக் கொட்டி விட்டு அந்தச் சிறு மணல் மேட்டிலிருந்து தபதபவென்று இறங்கிக் கீழே ஓடி வந்ததும் டகாரென்று நின்ருன் அமுதன்!

குப்பென்று நிலவு சாய்ந்தது!

எங்கும் வெள்ளிமயமான குளிர் நிலவு!

அமுதன் அமைதியாய் நின்ருன். சுற்று முற்றும் பார்த்தான். வெறிக்க வெறிக்கப் பார்த்தான். திடீ ரென்று சிரித்தான்!

ஒரே...வெறிச் சிரிப்பு!

அமுதன் நடந்தான். பையப் பைய நடந்தான். நடந்து கொண்டே இருந்தான். கொஞ்ச தூரம் வந்ததும்

டக்கென்று நின்றான். கீரிப்பிள்ளை உடல் மாதிரிக் கிடந்த மணலிலே எடுப்பாரின்றிக் கிடக்கும் காகிதப் பொட்டலத்தைப் பார்த்தான்.

குப்பென்று மாங்காய் ஊறுகாய் மணம் மண மணத்தது! பொட்டலத்திலிருந்த ஆறு இட்டிலிகளும், கோரப் பசியுடனிருக்கும் அமுதனைப் பார்த்துச் சிரித்தன;

"தயா வீட்டு இட்டிலி போலச் சுவையாயிருக்கே!"— முணுமுணுத்துக் கொண்டே எல்லாவற்றையும் உள்ளுக்குத் தள்ளினான் அமுதன். நின்ற நிலையிலேயே சாப்பிட்டுத் தீர்த்தான். பிறகு—அவன் உடலில்—உயிரில்—என்னவோ ஒரு உணர்ச்சி பாய்ந்து கிளுகிளுத்தது!

அதன் பின்—அவன் மௌனமாய் நடந்தான். நடந்து கொண்டே இருந்தவன்—தடாரென்று என்னவோ தடுக்கித் தொப்பென்று மணலில் விழுந்தான். சடாரென்று திரும்பினான். அவசரமாய்ப் பார்த்தான். அவன் காலுக்குப் பக்கத்திலே, மணலுக்குள்ளிருந்து வெளியே நீட்டி விறைத்துக் கொண்டிருந்தது ஒரு கை! புழுவும், பூச்சியும் அரித்துக் கொண்டிருந்த ஓர் எலும்புக் கை!





## நான்காம் அத்தியாயம்

சுமார் அரைமணி நேரம் வரைக்கும் உணர்ச்சியற்று மரக் கட்டையாய்க் கிடந்தான் அமுதன்!

சிறிது நேரம் கரைந்த பிறகு—

ஜில்லென்று குளிர் காற்று ரீங்காரமிட்டது.

அமுதன் உணர்வடைந்தான். மெல்ல எழுந்தான். அப்படி எழுந்து கொண்டபோது அவன் தேகம் தடதட வென்று ஆடியது! அமுதன், முகத்தில் கொட்டிய வியர்வையைப் புறங்கையால் துடைத்துக்கொண்டே மெல்லத் திரும்பினான்.

மறு கணம்—அவன் அங்கிருந்து ஓரே...ஓட்டமாக ஓடிவிட நினைத்தான். ஆனால்—அவனால் ஓடிவிட முடிய வில்லை! இல்லை; அவன் ஓடவில்லை! அவன் டபக்கென்று நின்றான். பூமிக்குள்ளிருந்து வெளியே நீட்டிகொண்டிருக் கும் அந்த எலும்புக் கையை உயிர் நடுக்கத்துடன் பார்த்துக்கொண்டே அவன் ஓட நினைத்தபோது, அந்த

எலும்புக்கை மோதிர விரலில், பளபளக்கும் பால் நிலவில் மினுமினுத்த வைர மோதிரத்தைக் கண்டதும்தான் அவன் ஓடாமல் நின்றான். ஒரு நிமிஷம் யோசித்தான். நெஞ்சிலே நெளிந்து புரளும் பெரும் பயத்தைச் சாமர்த்திய மாய் அடக்கிக் கொண்டான். தைரியத்துடன் எலும்புக் கையை நெருங்கினான். எலும்புக் கையின் மோதிர விரலிலிருந்து அதை யெடுத்துக் கொண்டபோது அமுதன் பட்டபாடு—அம்மம்மா! அந்த அழகிய வெண்ணிலா வுக்குத்தான் வெளிச்சம்!

அமுதன் அந்த மோதிரத்தைப் பார்த்தான். அந்த மோதிரத்துத் தலைப்பில் சிகப்புக் கல்லில் மினுமினுத்த இரண்டு எழுத்துக்களைப் படித்தான்.

"ராஜா!"—இந்தப் பெயரைப் படித்ததும் அமுதனுக் குத் தமிழோங்கிபுரத்துப் பாழடைந்த இரட்டைக் கிணற்றுள் செத்துக் கிடந்த நாயின் கழுத்திலிருந்த வெள்ளித் தகட்டின் நினைவு குப்பென்று தோன்றியது!

அமுதன் பிரமித்தான்!

மறு விநாடியே—அந்த எலும்புக் கைக்குச் சற்று தூரத்தில் மினுமினுத்த மற்றொரு பொருளை அவன் கண்கள் அகஸ்மாத்தாய்க் கண்டு விட்டன!

அமுதன் ஓடினான்.

அந்தப் பொருளை அவசரமாய் எடுத்துப் பார்த்தான்.

அது என்ன?

பொடி டப்பி! வெள்ளியால் செய்யப்பட்ட அழகிய பொடி டப்பி! அமுதன் அந்தப் பொடி டப்பியைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அந்தப் பொடி டப்பி யின் பின் புறத்தில் பச்சைக் கற்களில் பதித்திருந்த இரண்டு எழுத்துக்களைக் கண்டதும், அமுதன் திடுக் கிட்டான்! அவசரமாய்ப் படித்தான்.

'நாநா.' இதைப் படித்ததும் அமுதனின் பைத்தியம் 'கித்தியம்' எல்லாம் பறந்தோடிப்போயிற்று! அமுதன் நிமிர்ந்தான். வானத்தைப் பார்த்தான். வானத்தில் ஊரும் மேகங்களைப் பார்த்தான். மேகங்களுக்கு இடையிடையே தோன்றிப் பளபளக்கும் முழுமதியைப் பார்த்தான். பார்த்துக்கொண்டே யோசித்தான். மிகத் தீவிரமாக யோசித்தான். டக்கென்று குனிந்தான். அந்த விறைத்துக் கொண்டிருக்கும் எலும்புக் கையை டபக்கென்று காலால் அழுத்தினன். மோதிரத்தையும், பொடி டப்பியையும் கால் சட்டை ஜேபியில் போட்டுக் கொண்டான். இரண்டு கைகளாலும் மண்ணை வாரிவாரிக் கொட்டி அந்த எலும்புக் கையை மறைத்தான். மறைத்து விட்டு மறுபடியும் தீவிரமான யோசனையுடன் அங்கிருந்து நடந்தான். நடந்து கொண்டே யோசித்தான். யோசித்துக் கொண்டே நடந்தான். சுமார் ஏழு மைல் தூரத்திலுள்ள சாந்திபுரியை நோக்கி அவன் பாட்டுக்கு நடந்து கொண்டேயிருந்தான்.

இரவு மெல்ல மெல்லக் கரைந்துகொண்டே வந்தது.

அமுதன், அவன் பாட்டுக்கு யோசித்துக் கொண்டே நடந்தான். யோசித்து யோசித்து அவன் மண்டை—கபாலம்—ஆட்டங்கண்டு விட்டது! அமுதன் அப்போதுங் கூட யோசித்துக்கொண்டே இருந்தான். இந்த 'ராஜா—நாநா' என்பதைப்பற்றி யோசித்ததைப் போல எப்போதுமே எதைப் பற்றியும் இவ்வளவு தீவிரமாக யோசித்தது கிடையாது! கிடையவே கிடையாது!

"குக், குக், குக், கொக், கொக்!"—திடீரென்று அமுதனின் தலைக்கு மேலே ஒரு சப்தம்! சிந்தனைக் கடலின் அடித்தளத்திலே மூழ்கிக் கிடந்த அமுதன்—டக்கென்று நின்று, சடாரென்று நிமிர்ந்தான். பார்த்தான்.

இருளின் எமப்பிடியிலிருந்து விடுதலை யடைந்திருந்த வான வெளியிலே வெள்ளைக் கொக்குகள் சாரை சாரையாய்ப் பறந்துபோய்க் கொண்டிருந்தன!

"அட! பொழுது விடிஞ்சு போச்சா!" என்று வாயைப் பிளந்தபடியே சுற்றுமுற்றும் பார்த்தான் அமுதன்.

கொஞ்ச தூரத்தில்—

காலைச் சூரியனின் பொன்னிற இளஞ் சிரிப்பிலே சாந்திபுரிக் குடிசைகள் பொன்னிறமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தன!

சிந்தனைக் கொந்தளிப்பில் வாடிக் கருகிக் கிடந்த அமுதனின் முகம், சாந்திபுரிக் கிராமத்தைக் கண்டதும் மகிழ்ச்சியால் களைபெற்றுத் திகழ்ந்தது!

சாந்திபுரிக் கிராமத்தை நோக்கி அவசர அவசரமாய் நடந்தான் அமுதன். சிறிது நேரத்திற்குள் ஒரு சிறு கிராமத்தை அடைந்தான். அந்தக் கிராமத்தின் கடைசிக் கோடியிலுள்ள ஒரு சிறு குடிசை வாசலில் போய்ட் டக் கென்று நின்றான். மெள்ளக் குடிசைக்குள் எட்டிப் பார்த்தான்.

குடிசைக்குள்—

குடிசையின் ஒரு மூலையில் ஈரத் தரையில் பணிய அமர்ந்து எதிரில் வைத்திருந்த சிறு துணி முடிப்பிலிருந்து தங்க நகைகளை இனவாரியாகப் பிரித்து வைத்துக்கொண் டிருந்தான் ஒரு பையன். அவனுக்கு சுமார் பத்தொன்பது வயதிருக்கும். அமுதனைவிட ஒரு வயசு அதிகம்!

அமுதன் அந்தப் பையனைப் பார்த்தான். அந்தப் பையனின் எதிரில் துணி முடிப்பில் கிடந்த தங்கநகை களைப் பார்த்தான்.

என்னவோ ஒரு சிறு சந்தேகம்!

மறு கணமே, உயிரை வாட்டிக் கொண்டிருந்த கடும் பசி அமுதனின் நெஞ்சில் நெளிந்த சந்தேகப் புழுவை நசுக்கியது!

'தம்பி!'—அமுதன் குரல் தழுதழுக்க லேசாகக் கூப்பிட்டான். அமுதனின் மெல்லிய குரலைக் கேட்ட

அந்தப் பையன் திடுக்கிட்டுப் பயந்து, நகைகளை வாரிச் சுருட்டி முடிந்து குடிசையின் மூலையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த பானைகளின் இடுக்கிலே வீசி எறிந்துவிட்டுச் சடாரென்று திரும்பினான். வாடி வதங்கிய முகத்துடன் வாசலைப் பிடித்துச் சோர்ந்து நிற்கும் அமுதனைக் கண்டான்.

ஓரிரண்டு நிமிஷங்கள் வரைக்கும் பயங்கரமான அமைதி! அந்தப் பையன் அமுதனைப் பயத்துடன் பார்த்தான். பார்த்து—

"ஓ......! நான் என்னமோ ஏதோன்னு நினைச்சுப் பயந்தே போயிட்டேன்! சரி, வா. இப்படி உட்காரு. இதோ, ரொட்டி தரேன், வா!" என்று அன்பு நெளியச் சொல்லிக்கொண்டே, அந்தப் பையன் பரபரப்புடன் திரும்பினான். பானை இடுக்கில் கிடந்த நகை முடிப்பை எடுத்தான். போனான், பக்கத்தில் கிடந்த ஒரு மரப் பெட்டியைத் திறந்தான். நகை முடிப்பைப் பெட்டிக்குள் வைத்தான். வைத்துவிட்டுப் பெட்டிக்குள் எதையோ தேட ஆரம்பித்தான்.

அமுதன் மெல்லக் குடிசைக்குள் வந்தான். சுவர் ஓரமாக நின்றான். குடிசைக்குள் பார்வையைச் சுழல விட்டான். குடிசையின் ஒரு மூலையில் கிடந்த அடுப்பைப் பார்த்தான். அந்த அடுப்பிற்குள் தூங்கிக் கொண்டிருந்த பூனைக் குட்டியைப் பார்த்தான். பிறகு, அந்தக் குடிசைக் கூரையை நிமிர்ந்து பார்த்தான். கூரையின் ஒரு மூலையில் ஓலைகளுக்கிடையே செருகிவைத்திருந்த ஒரு கைத்தடியைப் பார்த்தான். அந்த அழகிய கைப்பிடியை—மலைப் பாம்பின் முகத்தைச் செதுக்கிக் கிடந்த கைப்பிடியை—பார்த்தான். அந்தக் கைப்பிடியில் அழகாகப் பொறித்திருந்த இரண்டு எழுத்துகளைப் பார்த்ததும்—படித்ததும்—அதிசயித்துப் பிரமித்து நெஞ்சுக்குள்ளேயே 'நாநா' என்று முணுமுணுத்தான்!

அடுத்த விநாடி—

"வா, தம்பி! சாப்பிட வா!" என்ற குரலைக் கேட்டதும் அமுதன் சடாரென்று திரும்பினான் திரும்பிய மறுவினாடியே, 'ஐயோ!" என்று அலறினான்!

ஏன்?

பளபளக்கும் கூர் நிரம்பிய கத்தியை அமுதனின் விலாப் புறத்திற்கு நேராக நீட்டிப் பிடித்தபடி ரொம்பக் குரூரமாய் நின்று கொண்டிருந்தான் அந்தப் பையன். அந்தப் பையனின் கையில் பளபளத்த குத்துக்கத்தியையும் அவனையும் மாறி மாறிப் பார்த்து நடுங்கினான் அமுதன்!

"டேய்! என்னடா பசப்புக் காட்டுறே? டேய், ஏ, காலி! என்னை ஏய்க்கவா பார்க்கறே? இவருகிட்டே அதுதான் தம்பி நடக்காது. உண்மையைச் சொல்லிப்பிடு. நீ சிங்காரதபுரத்து ஜமீந்தார் உளவாளிதானே? உண்மையைக் கக்கிப்பிடு. இல்லேன்னாக்க...இந்தக் கத்தி உன் கழுத்துலே விளையாடும்! உஷார்!" என்று உறுமினான் அந்தப் பையன்.

அவன் சொன்னதைக் கேட்ட அமுதனுக்கு அறிவு கிறு கிறுத்தது! உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது! அவன் விழித்தான்! என்ன செய்வது?—என்ன சொல்வது?—அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆம்; ஒன்றுமே புரியவில்லை!

அமுதன் விழித்தான்!

"என்னடா விழிக்கிறே? நீ சிங்காரதபுரத்து ஜமீன் ஆள்தானே? சொல்லுடா! இப்பப் பாரேன்!"

"என்னடா நீ என்னென்னமோ கேட்டு என் உயிரை வாட்டுறே! எனக்கு ஒண்ணும் புரியலையே, ஐயோ!"

"ஹை! குழந்தைக்கு ஒண்ணுமே தெரியாது! வாழைப் பழத்தை உரிச்சுக் கொடுத்தாக்க நைஸா சாப்பிடக்கூடத் தெரியாது! ஏண்டா, அப்படித்தானே?"

"டேய், தம்பி! சத்தியமாச் சொல்றேன், நான் சிங்காரதபுரத்து ஆளுமில்லே, தங்காரதபுரத்து ஆளுமில்லே! நான் வெளியூருடா. டேய் தம்பி! நான்...

வெளியூரு! தமிழோங்கிபுரத்துலேதான் அப்பா இருக்கிருரு. எங்க அப்பா அந்த ஊர் பண்ணைக்காரர். ஜாதி வெறி பிடிச்ச அவர் வீட்டிலே வாழ எனக்குப் பிடிக்கலே. என் படிப்பு மேலே சத்தியம் பண்ணிச் சொல்றேண்டா, நீ சந்தேகப்படுகிற அந்த விஷயங்களைப் பத்தி எனக்கு ஒரு துளிக்கூடத் தெரியாதுடா. நீ என்னமோ என்னைத் தவருக எண்ணிக்கிட்டு என்னை வீணுச் சாகடிக்கப் பாக்கிறியே! என்னை நம்புடா. நான் இந்தச் சமயத்துக்கு அண்ட இடமில்லாமத் திரியும் அநாதையடா! தயவு பண்ணி என்னைக் காப்பாத்துடா, டேய்......"

உள்ளத்தை உருக்கும் சக்தி வாய்ந்த அமுதனின் சோகப் பேச்சைக் கேட்ட அந்தப் பையன் அமுதனையே விழியசையாமல் பார்த்தான்.

அவன் மனம் பாகாய் உருகியது!

அவன் குத்துக் கத்தியை இடுப்பில் சொருகிக் கொண்டான். அமுதனை நெருங்கினுன். "டேய் தம்பி! ரொம்பப் பயமுறுத்திட்டேன். கோவிச்சுக்காதே, மன்னிச்சுக்க!" என்று அமுதனின் தோள்மீது அன்பாகக்கையைப் போட்டுப் பாயின்மீது உட்காரவைத்தான். அமுதன் கண்களைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்தான். அந்தப் பையன் ஓடினுன். அடுக்குப் பானை ஒன்றினுள் தனக்காக வாங்கி வைத்திருந்த சாப்பாட்டுப் பொட்டலத்தை எடுத்து வந்தான். அமுதனின் எதிரில் சாப்பாட்டுப் பொட்டலத்தைப் பிரித்து வைத்தான். சாம்பார் வாசனை குப்பென்று வீசியது! அந்தப் பையன் அமுதனைப் பார்த்து 'உம், சாப்பிடு!' என்ருன். அமுதன் சாப்பிட்டுத் தீர்த்தான். அவன் பசி தணிந்தது! ஆனல், அவன் சிந்தனைப் பசி மட்டும் தணியவில்லை!

சிறிது நேரத்து மௌனத்திற்குப் பின்—

"டேய் தம்பி. உங்க அப்பா எங்கே?" என்ருன் அமுதன்.

"வேலைக்குப் போயிருக்காரு!"

"எங்கே வேலை?"

"தங்கப்பட்டி ஜமீந்தார் பங்களாவிலே!"

"அவர் பேரு?"

"நாகநாதன்"—அந்தப் பையன் சொன்ன பெயரைக் கேட்டதும், அமுதனுக்கு—ஹ ஹும்! அவன் உயிரிலே, உடலிலே—குபீரென்று பாய்ந்து ரீங்காரமிட்ட உணர்ச்சி அலைகளைச் சொல்லி முடியுமா? அமுதன் சிலையாய் நின்றான்.

அந்தச் சமயத்தில்—என்ன?......



## ஐந்தாம் அத்தியாயம்

"டேய் முத்து! யார்ரா இது, ஆசாமி புதுசா இருக்கான்?" என்று அப்போதுதான் வீட்டிற்கு வந்த அந்தப் பையனின்—முத்துவின்—அப்பா அன்பாகக் கேட்டுக்கொண்டே குடிசைக்குள் புகுந்தார்.

தங்கப்பட்டி ஜமீந்தார் வீட்டில் வேலை செய்து விட்டு வாரத்திற்கு ஒரு தடவை வீட்டிற்கு வந்து போகும் தன் அப்பாவைக் கண்டதும் "அப்பா!" என்று கூவிக் கொண்டே பாய்ந்தோடி அப்பாவை டபக்கென்று கட்டிப் பிடித்துக்கொண்டான் முத்து.

அப்பாவையும், மகனையும் மாறி மாறிப் பார்த்தபடி பொம்மையாய் நின்றான் அமுதன். அவன் எண்ண மெல்லாம் அந்த 'நாநா—ராஜா' பெயர்களின் மீதே வட்டமிட்டுக் கொண்டிருந்தது!

"யார் இவன்?"—அமுதனைக் கண்ட முத்துவின் அப்பா முத்துவை மறுபடியும் கேட்டார்.

"என்னுடைய புதுச் சினேகிதன், அப்பா! இன்னைக்கி ஒரு அதிருஷ்டம் அடிச்சிருக்கே எனக்கு!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான் முத்து.

"என்ன அதிருஷ்டம்?" என்று கேட்டுவிட்டு, அமுதனைப் பார்த்து "நிக்கறியே தம்பி, உக்காரு" என்று சொல்லி, தாமும் விரித்திருந்த ஓலைப் பாயின்மீது களைத்து உட்கார்ந்தார், அப்பா. அமுதனும் உள்ளத்து அமைதியுடன் உட்கார்ந்தான். முத்து "இதோ கொண்டுவரேன். பாரேன்!" என்று சொல்லிக் குதித்தோடினான்.

சிறிது நேரத்தில், பெட்டியில் வைத்த நகை முடிப்பை எடுத்துக் கொண்டு துள்ளிக் குதித்தோடி வந்தான் முத்து. அப்பாவிடம் நகை முடிப்பை நீட்டினான். அப்பா நகை முடிப்பை வாங்கினார். முடிப்பிற்குள்ளிருந்த தங்க நகைகளைக் கண்டதும் அவர் ஜீவன் ஜிவுக்கென்று துள்ளியது!

"ஆ! ஏதுடா இது?"—அப்பா கூவினார்!

"இல்லேப்பா, நேத்து சாயந்திரம் நம்ப சாமுண்டித் தேவன் சத்திரத்துத் தோட்டத்துலே விளையாடிக்கிட்டிருந்தேன். அப்போ ஒரு மரத்துப் பொந்துக்குள்ளே இது இருந்திச்சு அப்பா!" என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னான் முத்து.

"உம். என்னமோ கடவுள் இன்னைக்காவது கண்ணைத் தொறந்து பார்த்தானே! சரி இதைப் பெட்டியிலே பத்திரமா வை!" என்றார் அப்பா.

அவர்கள் பேசியதையெல்லாம் கேட்ட அமுதனுக்கு ஆத்திரமாய்ப் பொங்கியது!

'என்ன ஜோக்காப் பேசிக்கிறானுங்க பாரு! ஹூம். ஆகட்டும்; ஆகட்டும்! அந்த ரெட்டைக் கிணத்து நாயைக் கொன்னுப் போட்டவங்களும், அந்த ஏரி மணல்லே கிடக்கும் அவனைக் கொன்னுப் போட்டதும் நீங்கதான்னு எனக்கு ரொம்ப நல்லாத் தெரிஞ்சுப் போச்சு அப்பேன்! பாக்கிறேன், உங்களை ஒரு கை!' என்று மனதிற்குள்ளேயே குமுறினான் அமுதன்.

"சரி. தம்பிக்கு ஏதாச்சும்..." என்று அமுதனைப் பார்த்துக்கொண்டே முத்துவைக் கேட்டார் அப்பா.

"ஓ...வயிறு நிறைய..." என்று குலுங்கிச் சிரித்தான் முத்து.

அமுதன் திடீரென்று என்ன நினைத்தானோ?

சரேலென்று எழுந்தான்.

"உங்களுக்கு ரொம்ப வணக்கம். நான் அவசரமாகத் தங்கப்பட்டிக்குப் போகணும். போய்வரேன்!" என்று முத்துவையும் அவன் அப்பாவையும் பார்த்துச் சொன்னான் அமுதன்.

அவர்களிருவரும் அமுதனின் திடீர்ப் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள்.

"என்னடா, வந்தே, சாப்பிட்டே, கிளம்ப வேண்டியது தானா?" என்றான் முத்து.

'அட கொலைகாரப் பாவிங்களே! கொஞ்சுறதுலே பலே கில்லாடியா இருக்கிறீங்களே' என்று நெஞ்சுக்குள் சொல்லிக் கொண்டே, "மன்னிக்கணும், நான் அவசரமாப் போகணும்!" என்று சொல்லிவிட்டு

அவர்கள் விடையைக்கூட எதிர்பார்க்காமல் குபீரென்று குடிசைக்குள்ளிருந்து வெளியே பாய்ந்து சென்றான் அமுதன்.

அப்பாவும் மகனும் பிரமித்தார்கள்!

"டேய், முத்து! உன் புதுச் சினேகிதனுக்குக் கொஞ்சம் மூளை......" என்று இழுத்தார் அப்பா.

"ஆமாமா! மூளை குழம்பித்தான் இருக்கணும்!" என்றான் முத்து பரக்கப் பரக்க விழித்துக்கொண்டே ....

"ஒரு வேளை......"

"ஒரு வேளை, ரெண்டு வேளை! அவன் அசல் பைத்தியக்காரக் கிராக்!" என்று முத்து சொன்னதுதான், அப்பா குபீரென்று சிரித்தார். முத்துவும் கொல்லென்று சிரித்தான்.

வெகு நேரத்திற்குப் பிறகு—

அமுதன் விர்ர்...ரென்று நடந்து கொண்டேயிருந்தான். சாந்திபுரியிலிருந்து தங்கப்பட்டிக்குப் போகும் கள்ளிக்காட்டு ரஸ்தா வழியாக என்னென்னவோ எண்ணிக்கொண்டே வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

"உம். கொலைகாரப் பாவிங்க கிடைச்சுட்டானுங்க. ஆனால் கொலை செய்யப்பட்டவன் தான், யாருன்னு...எல்லாம் தங்கப்பட்டி ஜமீன் ஆளாத்தான் இருக்கணும். ஐயோ! கொலை செய்யப்பட்டவன் யாரோ? யாருடைய மகனோ?"—இப்படிப் பலவிதக் கோணங்களில் எண்ணப் பறவைகளைப் பறக்க விட்டுக்கொண்டே நடந்து கொண்டிருந்தான் அமுதன்.

நடுப்பகல் ஒரு மணி, இரண்டு மணி, மூன்று, நான்கு, ஐந்து பொழுது சாய்ந்து விட்டது.

அமுதன் ஓயாமல் நடந்து கொண்டே இருந்தான்! தங்கப்பட்டி எல்லையை நெருங்கிக்கொண்டிருந்தான்.

செத்துக் கொண்டிருந்த வெளிச்சத்தை இரவு மெல்ல விழுங்கிக் கொண்டிருந்தது !

அமுதன் நடந்து கொண்டே இருந்தான். கொஞ்ச தூரத்தில் படர்ந்து கொண்டிருந்த பேயிருளிலே பையப் பைய மறைந்தபடி போய்க்கொண்டிருக்கும் இரட்டைக் குதிரைகள் பூட்டிய ஒரு கோச்சு வண்டியையே கூர்ந்து பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தான்.

திடீரென்று—!

கள்ளிக்காட்டு ரஸ்தாவின் இரு புறங்களிலிருந்தும் திடீரென்று ஓரே...பேய்க் கோஷங்கள் சீறி எழும்பின !

"ஹோய்ய்......ஹாய்ய்......வெட்டு ! கட்டு ! குத்து ! ஹேய்ப்......!"

இந்தத் திடீர்ப் பயங்கரக் கோஷங்களைக் கேட்ட அமுதனுக்குத் தூக்கி வாரிப்போட்டது! அவன் பயந்தான். பதறினான்; துள்ளினான்; ஓடினான்; ரஸ்தாவின் ஓரமாயிருந்த ஒரு பெரிய மைல் கல்லுக்குப் பின் புறத்தில் போய்ப் பதுங்கினான். பதை பதைக்கும் உள்ளத்துடன் பார்த்தான்.

கொஞ்ச தூரத்தில்—

கள்ளிக்காட்டு ரஸ்தாவின் இரு புறங்களிலும் அடர்ந்து படர்ந்து கிடந்த பெரும் புதர்களிலிருந்து கத்தியும் கழியுமாய்க் குபீர் குபீரென்று புற்றீசல்கள் போல் கிளம்பிய பல குண்டர்கள், அசைந்தாடிப் போய்க் கொண்டிருந்த அந்த இரட்டைக் குதிரைக் கோச்சு வண்டியைப் பிசாசுத்தனமாய்த் தாக்க ஆரம்பித்தார்கள் ! இந்தப் படுபயங்கரக் காட்சியைக் கண்ட அமுதனின் உயிர் ஜிவுக்கென்று துள்ளியது ! உடல் குலுங்கியது !

'இந்த இக்கட்டான சமயத்தில் என்ன செய்வது ? ஏது செய்வது ?—அமுதன்—சிந்தித்துச் சிந்தித்துப் பழக்கப் பட்ட அமுதன்—அந்தச் சமயத்திலும் தன் சிந்தனைக் குதிரையை அவசரமாய் ஓடவிட்டான். விரட்டினான் !

ஆ ! திடீரென்று ஒரு யுக்தி ! குயுக்தி !

திடீரென்று—

"டேய்ய்...விடாதே பிடி ! பிடி ! அடி ! சுட்டுப் பொசுக்கு ! வெட்டித் தள்ளு ! ஒய்ய்...! டேய்ய்...கந்தா ! கருப்பா ! மாயாண்டி ! ஓடியாங்க, ஓடியாங்க ! அப்படியே ஓடியா ! மடக்கு ! மடக்கு ! மடக்கு ! ஹோய்ய்... !" அமுதன் தன் சிந்தனை தந்த குயுக்தியை ரொம்பத் தைரியமாய்க் கையாண்டான் !

கள்ளிக்காட்டு ரஸ்தாவையே ஒரு கலக்குக் கலக்கிய அமுதனின் இந்தத் திடீர்க் கூச்சலைக் கேட்டதும் கோச்சு வண்டியைக் குரூரமாய்த் தாக்கிக் கொண்டிருந்த குண்டர்கள் எல்லோரும் ஆளுக்கொரு பக்கமாகப் பயந்து பதறிப் பஞ்சாய்ப் பறந்து விட்டார்கள் ! பிய்த்துக் கொண்டார்கள் !

திடீர்த் தாக்குதலால் அலை மோதிக் கொண்டிருந்த கோச்சு வண்டியை நோக்கிப் புயலாய்ப் பாய்ந்தோடினான் அமுதன்.

ஓரிரண்டு நிமிஷங்களுக்குள்—

அமுதன், அந்தக் கோச்சு வண்டியை அணுகினான். பார்த்தான். வண்டியின் முன்பக்கத்தில் மண்டையிலிருந்து ரத்தமாய்க் கொட்ட வண்டியின் கைப்பிடியின் மீது பிணம்போல் தொங்கிக் கிடந்தான் வண்டியோட்டி. ரத்தத்தைக் கண்ட அமுதனுக்குப் பித்தம் பிடித்தது போலாகியது. ஓரிரண்டு விநாடி நேரத்துப் பயங்கர மௌனத்திற்குப் பிறகு வண்டியின் பின் புறத்தில் தொங்கிக் கொண்டிருந்த பட்டுத் திரையை விலக்கி வண்டிக்குள் எட்டிப் பார்த்தான் அமுதன். உள்ளே ஒரு மூலையில் உயிர் நடுக்கத்துடன் குந்திக் கிடந்த அவள்—அந்தப் பெண்—அமுதனைக் கண்டதும் "ஐயோ !" என்று கூவினாள் ! அவள் பெயர் பவானி !

"தங்கச்சி ! பயப்படாதே ! சீக்கிரமா வண்டியைத் திருப்பிக்கிடலாம். உங்க வீடு எங்கே, சீக்கிரம் சொல்லு ;

நான் அந்தக் காலிப் பயல்களை விரட்டிவிட்டேன்!"— குண்டர்களை நினைத்துக் குலை நடுங்கிய அமுதன், அங்கிருந்து கிளம்பிவிடப் பதையாய்ப் பதைத்தான்!

"தங்கப்பட்டி ஜமீன் பங்களாவிலே..."—பவானி சொல்லி முடிப்பதற்குள், கீழே விழுந்து கிடந்த சாட்டையை எடுத்துக்கொண்டு அமுதன் தாவியோடினன். வண்டியோட்டி இடத்தில் போய் உட்கார்ந்தான். குதிரைகளின் கடிவாளத்தைச் சுண்டியிழுத்தான். "ஹேய்!" என்று அதட்டினன்.

கோச்சு வண்டி பறந்தது! தங்கப்பட்டி ஜமீந்தார் பங்களாவை நோக்கி ஜிவ்வென்று பறந்தது!

கொஞ்ச நேரத்திற்குள்—

கோச்சு வண்டி தங்கப்பட்டி ஜமீன் பங்களாவுக்குள் நுழைந்தது! வண்டியின்மீது ரத்தமயமாய்க் கிடக்கும் வண்டியோட்டியையும், வண்டியை ஓட்டிவந்த அமுதனையும் கண்டதும் பங்களாவில் ஒரே...பரபரப்பு உண்டாகியது! விஷயமறிந்த ஜமீந்தார் "ஐயோ என் மகளே!" என்று அலறிப் புடைத்துக் கொண்டு ஓடோடியும் வந்தார். அப்பாவைக் கண்ட பவானி வண்டியிலிருந்து டபக்கென்று கீழே குதித்தாள். பயங்கர ஆபத்திலிருந்து அமுதனல் காப்பாற்றப்பட்டதை ஒன்று விடாமல் சொல்லித் தீர்த்தாள்.

அவ்வளவுதான்! ஜமீந்தார் சாமுண்டிப் படையாச்சிக்கு ஆத்திரம் குமுறிக் கொந்தளித்தது!

"டேய், மாயாண்டி! மருதை! காளப்பா! காட்டேரி! உம்! கிளம்புங்கடா! சிங்காதபுரத்தானைச் சின்னபின்னமாக்குங்க! உம், கிளப்புங்கடா! உம், ஜல்தி!" என்று குமுறும் கடலாய்க் கூச்சலிட்டார்!

அடுத்த கணமே, ஜமீன் ஆட்கள் துப்பாக்கியும், தடியுமாய்க் கோச்சு வண்டியிலேறிக்கொண்டு சிங்காதபுரத்து ஜமீனை நோக்கிக் காற்ருய்ப் பறந்தார்கள்!

சிறிது நேரம் வரைக்கும் காட்டுமிராண்டித்தனமாய்ப் பறந்து செல்லும், தம் ஆட்களை ஏற்றிச் செல்லும் கோச்சு வண்டியை ஜமீந்தார் கண்ணசையாமல் பார்த்துக் கொண்டேயிருந்தார். பிறகு, தம் அருமைப் பவானியைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொண்டார். அருகில் சிலையாய் நிற்கும் அமுதனை நன்றி வெடிக்கப் பார்த்தார்.

"தம்பி, அந்தக் கொலைகாரப் பாவிங்களிடத்துலேருந்து என் அருமை மகளைக் காப்பாத்தின நல்ல தம்பி! வா போகலாம்!" என்று அமுதனையும் அழைத்துக்கொண்டு பங்களாவுக்குள் நுழைந்தார். அதே சமயத்தில் உள்ளேயிருந்து ஒரு கோரக் கூச்சல்!

"ஜேய்ப்...காளி! ஜேய்ப்...சாமுண்டி! குமுருதிங்க, ஜமீந்தார்! உங்க எதிரியை—அந்தப் பேடிப் பயலை இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே பேய்க்கு விருந்து வைக்கிறேன்! ஹோஹ்ஹோஹ்ஹோ! ஜேய்ப்...சாமுண்டி!"

எல்லோரும் உள்ளே பார்த்தார்கள். ஒரு மாதத்திற்கு முன்னே, சிங்காதபுரத்து ஜமீனைப் பூதங்களை ஏவிவிட்டு அழிப்பதற்காக ஜமீந்தார் அழைத்து வந்திருந்த ஒரு மாயாவி, கபாலமும் கையுமாய் உள்ளேயிருந்து அன்ன நடை நடந்து அவர்களை நெருங்கினான்.

அமுதன், அந்தப் பயங்கர உருவம் படைத்த மாயாவிக் கிழவனைப் பார்த்தான். உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் பார்த்தான். அவன் அணிந்திருந்த ஒவ்வொரு அணி, மணிகளையும் பார்த்தான். அப்படிப் பார்த்துக் கொண்டே வந்தபோது, மாயாவியின் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பொருள், அமுதனின் உயிரைத் துள்ளிக் குதிக்கச் செய்தது!

அது என்ன பொருள்?

'நாகா' என்ற எழுத்துப் பொறித்த ஒரு வெள்ளிப் பொடி டப்பி!



## ஆறும் அத்தியாயம்

அந்தப் பயங்கர மாயாவியின் இடுப்பிலிருந்த பொடி டப்பியில் நா.நா என்ற எழுத்துக்களைக் கண்டதும் அமுதனின் அறிவு கிர்ர்...ரென்று சுழன்று, குபுக்கென்று ஓர் அந்தர் பல்டி யடித்தது!

அந்த மாயாவியின் பயங்கர உருவத்தையும், அவனுடைய பொடி டப்பியையும் மாறி மாறிப் பார்த்தபடி கல்லாய்ச் சமைந்து நின்றான் அமுதன்.

“உம் எல்லாம் உங்கள் கருணைதான். அவனை அப்படியே பஸ்மீகரம் பண்ணிப்பிடுங்க! வாங்க மேலே போய்ச் சாவதானமாப் பேசலாம்” என்று மாயாவியைப் பார்த்து மரியாதையுடன் சொல்லிவிட்டு, தம் அருமை மகள பவானியைப் பார்த்து, “பவானி! தம்பியை அழைச்சுப் போய்ப் பலகாரம் பால் எல்லாம் கொடு” என்று சொல்லிவிட்டு, ஜமீன்தார் சாமுண்டிப் படையாச்சி மாயாவியுடன் மேல் மாடிக்குப் போனார்.

பவானி, அமுதனை அழைத்துக்கொண்டு பின் கட்டில் உள்ள ஓர் அழகிய அறைக்குள் நுழைந்தாள்.

"டேய்...ம்...உன் பேரு என்னடா?" என்று திடீரென்று கேட்டாள் பவானி.

"ஏன்? என் பேரு அமுதன்" என்று தயங்கித் தயங்கிச் சொன்னான் அமுதன்.

"இல்லே, சும்மா கேட்டேன். ஆமா, என் பேரு..."

"ஓ...தெரியுமே!"

"எப்படி?"

"நான் வந்ததுக்குள்ளே உங்க அப்பா 'பவானி' 'பவானி'ன்னு ஆயிரம் தடவை கூப்பிட்டதை நான் கேட்டுண்டேதானே இருக்கேன்!"

"ஓஹ்ஹோ! சரிதான். நீ இந்தச் சோபாவிலே கொஞ்ச நேரம் உக்காரு. இதோ வந்துட்டேன்" என்று சொல்லிக்கொண்டே ஜிவ்வென்று வெளியே பாய்ந்தோடினாள் பவானி.

பவானி சுட்டிக் காட்டிய சோபாவில் அமர்ந்த அமுதன், அந்த அறையில் மாட்டியிருந்த சிறிய பெரிய அழகுப் போட்டோக்களை அப்படி...பராக்குப் பார்க்க ஆரம்பித்தான். ஒவ்வொரு படமாகப் பார்த்துக்கொண்டே வந்தான்.

முதல் படம்: ஜமீன்தார் சாமுண்டிப் படையாச்சி, செத்து நீண்டு கிடந்த ஒரு பெரிய வேங்கைப் புலியின் பக்கத்தில் இரட்டைக் குழல் துப்பாக்கியுடன் கம்பீரமாய் நின்று கொண்டிருக்கிறார்.

இரண்டாவது படம்: ஓர் அழகிய வெள்ளைக் குதிரையின் மீது சாட்டை வைத்துக்கொண்டு ராஜ கம்பீரமாய் அமர்ந்திருக்கிறாள் பவானி.

மூன்றாவது படம்: அழகான ஒரு பெரிய வேட்டை நாயை மார்போடு அணைத்துத் தழுவிக் கொண்டிருக்கிறான்

ஒரு பையன். அந்த நாயின் கழுத்திலிருந்த வார்ப் பட்டையில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு வில்லையில் ராஜா என்றிருக்கிறது! அந்தப் பையனின் மோதிர விரலிலிருந்த மோதிரத்திலும் 'ராஜா' என்றிருக்கிறது!

இந்தப் படத்தைக் கண்டதும் அமுதனுக்குப் பகீரென்றது. அவன் அந்தப் படத்தையே வெகு நேரமாக உள்ளமும் உடலும் படபடக்க வியர்வையாய்ச் சொட்டச் சொட்ட விழியசையாமல் பார்த்துக்கொண்டிருந்தான்! அவன் அறிவு புயல் வேகத்தில் எதை எதையோ எண்ணிப் பார்த்துக் குழறியது!

அமுதன் சிலையாகக் கிடந்தான்.

கொஞ்ச நேரம் ஆயிற்று.

"டேய் அமுதா. அந்தப் படத்திலே அப்படியே சொக்கிப்பிட்டியே?" என்று கேட்டுக்கொண்டே பலகாரத்தட்டுடன் உள்ளே நுழைந்தாள் பவானி.

பவானியை கண்ட அமுதன் பரபரப்படைந்தான்.

"உம்...ம்...ஒண்ணுமில்லே...சும்மாப் பார்த்துக்கிட்டேயிருக்கேன். பலகார வாசனை மூக்கைத் துளைக்குதே! உம். இன்னைக்கு என்பாடு கொண்டாட்டந்தான்! இப்படிக் கொண்டா" என்று ஏதேதோ சொல்லி நிலைமையைச் சமாளித்துக்கொண்டு பவானியின் கையிலிருந்த பலகாரத் தட்டை வாங்கி அங்கிருந்த ஓர் அழகிய வட்டமான மேஜையின் மீது வைத்தான் அமுதன். பவானி எதிர்புறமாயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அமுதன் அவளுக்கு எதிராக மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

"என்ன பவானி, ஆரம்பிக்கலாமா?"

"ஓ...தாராளமா!"

"அப்போ, நீ?"

"உம், ஹூம்! நான் இல்லே. எல்லாம் நீதான். உம், ஆகட்டும்!" என்று முத்துப் பல் காட்டிச் சொன்னாள் பவானி.

அமுதன் ஆரம்பித்தான். அந்த அழகிய வெள்ளித் தட்டிலுள்ள அருமையான பலகாரங்களை ஒவ்வொன்ருக உள்ளுக்குத் தள்ள ஆரம்பித்தான். அத்துடன், அந்தத் தமிழோங்கி புரத்து இரட்டைக் கிணற்றுள் செத்துக் கிடந்த நாய். அதன் கழுத்திலிருந்த 'ராஜா' என்ற வெள்ளித்தகடு, அந்த ஏரி மணலில்கிடந்த எலும்புக் கை, அந்தக் கையிலிருந்த 'ராஜா' என்ற எழுத்துப் பொறித்த வைர மோதிரம், அங்கு அகப்பட்ட 'ராஜா' என்ற எழுத்துப் பொறித்த வெள்ளிப் பொடி டப்பி வைத்திருக்கும் மாயாவி எல்லோரையும் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தான்!

கொஞ்ச நேரம் ஊர்ந்து போயிற்று.

அமுதன் மெல்லப் பவானியுடன் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான்.

"பவானி, அந்தப் படத்துலே இருக்கிறவன் யாரு?"— அமுதன், நாயை அணைத்துக்கொண்டிருக்கும் அந்தப் படத்திலுள்ள பையனைக் காட்டிக் கேட்டான்.

பவானி பதுமையாய்க் கிடந்தாள்.

"என்ன பவானி, கேக்கிறேன்......"

"அவன் என் அண்ணன்டா!" என்று சொல்லிவிட்டுக் கண்ணீர் வழிந்த கண்களை பாவாடைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள் பவானி. அவள் அழுவதைக் கண்ட அமுதன் ஓரளவு விஷயத்தை ஊகித்துக் கொண்டான். இத்தனை நாளும் அவன் அறிவைக் குழப்பிக் கொண்டிருந்த விஷயமும் கொஞ்சம் புரிய ஆரம்பித்தது. அவன் பலகாரங்களைக் குளோஸ் பண்ணிவிட்டு வெள்ளித் தம்ளரிலிருந்த கல்கண்டு கலந்த பாலைச் சுவைத்துக் குடித்துக்கொண்டே மறுபடியும் கேட்டான்.

"அதுக்கு எதுக்கு அழறே?"

"அவன் செத்துட்டான்!"

"எப்படி?"

"அது ஒரு பெரிய கதை!"

"என்ன கதை?"

"வா ; தோட்டத்துக்குப் போகலாம். அங்கே சொல்றேன் அந்தக் கதையை" என்று சொல்லிக்கொண்டே பவானி இடத்தை விட்டு எழுந்தாள். அமுதனும், பாலைக் குடித்துத் தீர்த்துவிட்டு, தம்ளரை மேஜைமீது டொக் கென்று வைத்தான். பவானியுடன் கிளம்பினான். அவனுடைய மனம், பவானியின் அண்ணனைப் பற்றித் தெரிந்து கொள்ளத் துடியாய் துடித்தது!

பவானியும், அமுதனும், பங்களாவுக்குப் பின்புறத்திலுள்ள பூங்காவனத்திற்கு வந்தார்கள். அங்கிருந்த ஒரு விசுப் பலகையின் மீது உட்கார்ந்தார்கள்.

சிறிது நேரம் மௌனம்.

"பவானி! ஏன் கூட்டிக்கிட்டு வந்தே? எதுக்குச் சும்மா கிடக்கிறே?"

"இதோ, சொல்றேன் கேளு" என்று கண்களைத் துடைத்துக்கொண்டு பவானி சொன்னாள்.

"எங்க தாத்தா காலத்துலே இருந்து இன்னைக்கி வரைக்கும் எங்களுக்கும், சிங்காநதபுரத்து ஜமீனுக்கும் ஒரே...ஜன்மப் பகை! அது ஓயாமலும் ஒழியாமலும் இன்னைக்கி வரைக்கும் இருந்துகிட்டே வருது! வழியிலே, நான் கோச்சு வண்டியிலே வரபோதுகூட மடக்கித் தாக்கினவனுங்க சிங்காநதபுரத்து ஆளுங்கதான்! எங்க ஊரைக் கண்டாக்க அவங்களுக்கு ஆகாது! அவங்க ஊரைக் கண்டாக்க எங்களுக்கும் ஆகாது! இந்தப் பகை, இந்த ரெண்டு ஊர் மக்களுடைய ரத்தத்திலேயும் அப்படியே பரம்பரை பரம்பரையா ஊறிப்போய்க் கிடக்குது! எங்களுக்கும் அவங்களுக்கும், எத்தனை ராத்திரி பயங்கரமான சண்டையெல்லாம் நடந்திருக்குது! அதுலே எத்தனையோ பேர் செத்துப் போயிருக்காங்க. எங்க அம்மாகூட ஒரு வருஷத்துக்கு முன்னே நள்ளிரவிலே நடந்த துப்பாக்கிச் சண்டை

யிலே குண்டடிபட்டு......''— பவானி மேலும் சொல்ல முடியாமல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். பிறகு—

"சுமார் ஆறு மாசத்துக்கு முன்னே எங்க அண்ணன் ராஜமாணிக்கம், அது உயிருக்குயிரா வளர்ந்து வந்த 'ராஜா'ங்கிற வேட்டை நாயைக் கூட்டிக்கிட்டுத் தமிழோங்கிபுரத்துலேயிருக்கிற அவன் சிநேகிதன் வீட்டுக்குப் போனான்......" என்று பவானி மேலும் என்னவோ சொல்லுவதற்குள் சடாரென்று இடைமறித்துப் பேசினான் அமுதன்.

"உங்க அண்ணனுக்குத் தமிழோங்கிபுரத்துலே சிநேகிதனா? அவன் பேரு என்ன?"

"அவன் அந்த ஊர்ப் பெரிய பண்ணைக்காரர் மகனாம். அவன் பேரு...... அதென்னவோ மறந்துபோச்சு. அப்புறம் கேளேன்" என்று மறுபடியும் ஆரம்பித்தாள் பவானி.

அமுதன் ஏதோ ஓர் எண்ணத்துடன், பவானி சொல்வதைக் கவனமாய்க் கேட்க ஆரம்பித்தான்.

"அப்புறம், எங்க அண்ணன், அவனுடைய வேட்டை நாயோடு எங்க அப்பாகிட்டே சொல்லிக்கினு கிளம்பிச்சு. அவ்வளவுதான். ஒரு நாள், ரெண்டு நாள்...... எத்தனையோ நாளாச்சு. இதோ ஏறக்குறைய ஏழு மாசம் ஆகப்போகுது! இன்னும் வரக்காணோம்! எல்லாம் அந்தச் சிங்காநாதபுரத்துப் பசங்கதான் என் அண்ணனைக் கொன்னுப்பிட்டிருப்பானுங்க" என்று சொல்லி முடிப்பதற்கும் "ஜேய் சாமுண்டி!" என்று நெஞ்சை நடுக்கும் பயங்கரக் கோஷம் திடீரென்று கிளம்புவதற்கும் சரியாக இருந்தது!

பவானியும், அமுதனும் டகாரென்று திரும்பிப் பார்த்தார்கள். பூங்காவனத்து ஆலமரத்து அடியிலே கையிலே கபாலமும், எலும்புமாய் நின்றுகொண்டிருந்தான் மாயாவி! அவனைக் கண்டதும் பவானி மரியாதையாய் எழுந்து நின்று பயத்துடன்—பக்தியுடன்—வணக்கம் செய்தாள். அமுதனும், உணர்ச்சியின்றி வெறுப்புடன் வணக்கம் புரிந்தான்.

"ஜேய்ய்...... சாமுண்டி! ஜெய்ய்...... சாமுண்டி!" என்று வெற்றிலைக் கறைபடிந்த முள்ளங்கிப் பற்களைக் காட்டிக் கோரமாய்ச் சிரித்துக்கொண்டே அங்கிருந்து அசைந்தாடிச் சென்று மறைந்தான் அந்தக் கோர மாயாவி.

சிறிதுநேர அமைதிக்குப் பின்—"பவானி! இவனுடைய பேரு என்ன ?" என்முன் அமுதன்.

"அடப் பாவி! புத்தி போட்டுக்கடா! அவரைப் போய் 'அவன், இவன்னு' மரியாதையில்லாம பேசுறியே! போட்டுக்க குட்டு" என்று பயந்து பதறினுள் பவானி!

அமுதன் நெஞ்சுக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு "சரி. புத்தி! புத்தி! அவரு பேரு என்னவாம்?" என்று மீண்டும் கேட்டான்.

"அவர் பேரு மாயாவி நாகமுத்து நாச்சியார்" என்றுள் பவானி.

எதையோ பூராவும் தெரிந்துகொண்டதைப்போல அமுதனின் அறிவு மகிழ்ச்சி பொங்கத் துள்ளிக் குதித்தது! ஓரிரண்டு நிமிஷங்கள் வரைக்கும் ஏதோ எண்ணிவிட்டு "ஆமா, அவரை இங்கே எதுக்குச் சேர்த்து வைச்சுட்டிருக்கிங்க?" என்று மறுபடியும் ஒரு கேள்வியைத் தூக்கிப்போட்டான் அமுதன்.

"நாளை மறு நாளைக்கி, அமாவாசை நள்ளிரவுலே நம்ப கோவணாண்டிச் சாமியார் சுடுகாட்டுலே மந்திரம் பண்ணி, பூதங்களைக் கூப்பிட்டு, சிங்காதபுரத்துக்கு ஏவி விட்டு..."—பவானி மேலே மேலே சொல்லிக்கொண்டே போவதைக் கண்ட அமுதன் 'கொல்'லென்று சிரித்தான்!

பவானி திடுக்கிட்டாள்!

"டேய் அமுதா! ஏண்டா இப்படித் திடீர்னு சிரிக்கறே?"

"ஆமா, அவர் யாரு?"

"மந்திரக்காரரு!"

"ஓஹ்ஹோ ஹ்ஹோ...! ஆஹ் ஹா ஹ்ஹா......!"—அமுதன் மேலும் மேலும் சிரித்தான்! உடல் குலுங்கக் குலுங்கச் சிரித்தான்! அவன் சிரிப்புக்கு அர்த்தம் புரியாத பவானி, சிறிது கோபமடைந்து "டேய்! ஏண்டா சிரிக்கறே?" என்று கூவினுள்!

அமுதன் டக்கென்று சிரிப்பை அடக்கிக்கொண்டு ஆவேசம் வந்தவனைப்போலக் கத்த ஆரம்பித்தான்.

"பவானி! நீ மக்கு! அசல் மக்கு! அந்தப் படுபாவி மந்திரக்காரன்! அந்த இரக்கமற்ற கோர மனிதன், மந்திரக்காரன்! கொலை செய்ய அஞ்சாத அந்தக் கொடும் பாவி, மந்திரக்காரன்! அவன் மந்திரக்காரன்! மந்திரக்காரன்! வயிறு பிழைக்க வேறு வழியறியாத அந்த மடையன், மந்திரக்காரன்! மந்திரக்காரன்! பவானி! அவன் மந்திரக்காரனில்லே! மடையனுங்களை ஏமாற்றி வயிறு பிழைக்கும் தந்திரக்காரன் அவன்! ஓஹ்ஹோ ஹ்ஹோ! ஹோஹோ ஹோ" என்று வெறிக் கூச்சலிட்டுக்கொண்டே அங்கிருந்து புயலாய்ப் பாய்ந்தோடி, பூங்காவனத்து வேலியைத் தாண்டித் தாவியோடி மாயமாய் மறைந்துபோனுன் அமுதன்!



## ஏழாம் அத்தியாயம்

இரண்டாம் நாள், மாலை ஐந்தரைமணி! ஒரே-மப்பும் மந்தாரமுமாய்க் கிடந்தது. ஜில்ல்...லென்று குளிர் காற்று ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

பஞ்சாங்கக் குறிப்பின்படி அன்று, அப்பொழுது மழை பெய்ய வேண்டியது. சும்மா, வெளுவெளு என்று வெளுத்துக்கட்ட வேண்டியது. கொட்டு கொட்டென்று கொட்டவேண்டியது!

ஆனால்—மழை பெய்யவில்லை; ஒரு பொட்டு மழை கூடப் பெய்யவில்லை!

நேரம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய ஆரம்பித்தது.

மணி ஆறு ஆயிற்று. ஆறரை, ஏழு, ஏழரை, எட்டு ஆயிற்று. அவ்வளவுதான்! மறு வினாடி....?

கறுத்துக்கிடந்த வானம் 'டீ'ரென்று வெளுத்து விட்டது! குளிர் காற்று, மறைந்து, வெப்பங் கலந்து வீசியது! வெளிறிவிட்ட நீல நிற வானத்தில் தாரகைகள் கண் சிமிட்ட ஆரம்பித்தன. அன்று அமாவாசையான தால் சந்திரன் ரஜா எடுத்துக்கொண்டிருந்தான்.

நேரம் கொஞ்சம் கொஞ்சமாக உருகவாரம்பித்தது.

கருக்கிருள்; காரிருள்; பேயிருள்—ஆக எல்லாயிருளு மாகச் சேர்ந்து வானத்தையும், வையத்தையும் ஒரே இறுக் காக இருக்க ஆரம்பித்தது.

நடு நிசி!

கோவணாண்டிச் சாமியார் சுடுகாட்டிலே ஒரே பயங் கரமான அமைதி! அந்தப் பயங்கர அமைதி, அடிக்கொரு தடவை செத்துச் செத்து உயிர் பெற்றுக்கொண்டிருந்தது!

நரிகள் ஊளையிட்டன!

ஆந்தைகள் அலறின!

கோட்டான்கள் கூவின!

அம்மம்மம்மா! உயிரை நடுக்கும் ஓரே பயங்கரம்!

சில நிமிஷ நேரங்களுக்குப் பின்—

அதோ! சுடுகாட்டு வாசல் அருகிலே ஒரு சிறு விளக்கு வெளிச்சம் பிரகாசிக்கிறது. அந்த விளக்கு, சுடுகாட்டின் நடுவிலுள்ள பிணம் எரிக்கும் மேடையை நோக்கி மெல்ல நகர்ந்து போகிறது. அந்த விளக்கு வெளிச்சத்தில், இந்தக் காடாந்தகார இருளில் கூர்ந்து பார்த்தால்—நாலைந்து மனிதர்கள் புலப்படுகிறார்கள்.

அவர்கள் யார்? நெஞ்சை நடுக்கும் இந்த நள்ளிரவிலே, பயங்கரத்தை எழுப்பும் சுடுகாட்டிலே அவர்களுக்கு என்ன வேலை?

வேலை இல்லாமல் வருவார்களா? இந்த நடுநிசி நேரத்திலே யார்தான் வருவார்கள்? யாரும் வரமாட்டார்கள்!

பின்னே—என்ன வேலையாக வந்தார்கள்? அவர்கள் யாரோ?

சொல்கிறேன்:

ஜமீந்தார் சாமுண்டிப் படையாச்சி, மாயாவி நாகமுத்து நாச்சியார், நான்கு வேலைக்காரர்கள் எல்லோரும் தட்டுமுட்டுச் சாமான்களைத் தூக்கிக்கொண்டு அந்தப் பிணம் எரிக்கும் மேடைமீது போய் உட்கார்ந்தார்கள்.

என்ன வேலையாக?

மாயாவி நாகமுத்து நாச்சியாரின் மந்திரத்தின் மூலமாகப் பூதங்களைக் கூப்பிட்டு, சிங்கநாதபுரத்து ஜமீனை ஹதம் பண்ணுவதற்காகத்தான்!

கொஞ்ச நேரத்திற்குள்—

மாயாவி, ஒரு பெரிய அக்னிகுண்டத்தை வளர்த்தான். சரேலென்று எழுந்து நின்றான். கையிலிருந்த மண்டை

யோட்டையும், எலும்புத் துண்டையும் வானத்தை நோக்கிப் பிடித்து, மகா பயங்கரமாக மந்திரங்களை உச்சரிக்க ஆரம்பித்தான்!

"ஜேய்ய்......சாமுண்டி! நீலி! திரிசூலி! காளி! கபாலி! ஜேய்ய்.. ...சாமுண்டி! ஜேய்ய்......சண்டி! பறந்தோடி வாடி! பக்கம் வாடி! பலன்தாடி! சக்தி! ஹோ ஹ்ஹ ஹோ ஹ்ஹோ ஹோ ஹோ...!" மாயாவி மகா பயங்கரமாய்—அந்தச் சுடுகாடே அதிரும்படி பேரிரைச்சல் போட்டான்! அவனுடைய குரூரமான கூச்சலைக் கேட்டு, சுடுகாட்டு நரிகள் மூலைக்கொன்றாய்ப் பிய்த்துக்கொண்டன! ஆந்தைகள் அலறிப் பறந்தன! கோட்டான்கள் கூவித் தாவிப் பாய்ந்தோடின!

அரக்கத்தனமாகக் கர்ஜனை புரியும் மாயாவியின் கோழிமுட்டைக் கண்களையும், கொம்பேறி மூக்கையும், கொடுவாள் மீசையையும், கோரப் பற்களையும். அவன் முகத்தில் தாண்டவமாடும் குரூரத் தன்மையையும் கண்ட ஜமீந்தாருக்கும். வேலைக்காரர்களுக்கும் அடிவயிற்றில் புளியைக் கரைத்தது! ஒரே...பயம்! ஒரே...நடுக்கம்!

மாயாவி மறுபடியும் ஜபிக்க ஆரம்பித்தான்!

"ஜேய்...! ஜேய்... சூரி! காட்டேரி! ஓடிவா! ஓடி வா! ஜேய்ய் சாமுண்டி! சண்டி! ஜடாதாரி! ஜேய்ய்...காளி! ஓம் ரீங்...! ஸ்ரீ ரிங்! ஹரி ரீங்...! ஐயுங் கிலியுங், சவ்வும், சவ்வும் ..ஓம்ம்...சக்தி! சாமுண்டி! ஹஹ்ஹ ஹஹ்ஹா...ஆ...அதோ! வந்துவிட்டாள் சண்டி! ஆயிரமாயிரம் பூதங்களோடு கூத்தாடிக்கொண்டே வந்துவிட்டாள் கபாலி! ஓம்! ஓம்ம்!...ஓம்ம்...!" என்று வானத்தைச் சுட்டிக்காட்டி விட்டு, 'தொம்! தொம்' என்று வெறிக் கூத்தாட ஆரம்பித்தான் மாயாவி!

ஜமீந்தாரும், வேலைக்காரர்களும் படா காபராவுடன் சடார் சடாரென்று நிமிர்ந்தார்கள். மாயாவி சுட்டிக் காட்டிய வான வெளியிலே கூர்ந்து பார்த்தார்கள்.

அங்கே-மாயாவி சுட்டிக்காட்டிய வான வெளியிலே—

'மாயி, மகமாயி, சண்டி, சாமுண்டி, காளி, கபாலி, தன் கண்ணுன சகாக்களாகிய பூதங்களோடு பேய் நடனம் புரிந்தபடி மாயாவியை நோக்கி ரத்தநாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு வந்துகொண்டிருந்தாள்!' என்றெல்லாம் சொல்லவில்லை!

பின்னே—?

வான வெளியிலே மகா காளியையும் காணோம், மண்ணுங்கட்டிக் காளியையும் காணோம்! வான வெளியிலே வெறும் சூன்யத்தைக் கண்டு ஏமாந்த ஜமீந்தாரும், வேலைக்காரர்களும் விழித்தார்கள்!

அந்தச் சமயத்தில்—

"ஹோய்......! ஹோய்ய்......! ஹோ!"— பயங்கரமான திடீர்க் கர்ஜனை! இந்தக் கர்ஜனையைக் கேட்டதும், மாயாவி, ஜமீந்தார் எல்லோரும் டகார் டகாரென்று திரும்பிப் பார்த்தார்கள்.

கொஞ்ச தூரத்திலுள்ள இடிந்து, வீழ்ந்து, நொறுங்கி நாசமாகிக் கிடந்த ஒரு சமாதியின் மீது, இருளைப் பூசிக்கொண்டிருந்த ஒரு கரிய உருவம், தலைமீது ஒரு பெரிய நெருப்புச் சட்டியை வைத்துக்கொண்டு மகா பயங்கரமாய் நின்றுகொண்டிருந்தது! ஐயோ!

அந்தக் கரிய உருவம் காலைப் பரப்பிக்கொண்டு நின்ற தினுசையும், அதன் தலைமீது திகுதிகு வென்று கொழுந்து விட்டெரியும் நெருப்புச் சட்டியையும் கண்ட மாயாவி உள்பட எல்லோருக்கும் அடிவயிறு கடம்டா என்று கலங்க ஆரம்பித்தது! திடீர்ப் பயத்தால் எல்லோருக்கும் நடுக்கம் கண்டுவிட்டது!

மறு விநாடி—?

"ஓ......ஹோ! ரத்தம்! ரத்தம்! ரத்தம்! ஹேய்ய்...! என் பிரதேசத்துலே காலடி எடுத்து வைச்சவன் யாருடா? டேய்...! இப்ப உங்களைக் கிழிச்சு பிய்ச்செடுத்து, ரத்தத்தைக் குடிச்சு......ஹோஹ்ஹோ ஓ...ஹேய்ய்...!" என்று

மகா உக்கிரமாக ஓங்காரக் கூச்சலிட்டுக்கொண்டே அந்த நெருப்புச் சட்டி உருவம் ஒரு துள்ளுத் துள்ளியது! ஒரு குதி குதித்தது! ஜமீந்தாரை நோக்கித் தாவியோடி வந்தது. "ஓஹா! ஓஹா!" என்று ஓலமிட்டுக்கொண்டே! ஐயோ!

அடுத்த கணம்—?

பூதங்களை அழைக்க வந்த மாயாவியும், அந்த மாயாவியின் பேச்சை நம்பிவந்த ஜமீந்தாரும், ஜமீந்தாரின் பேச்சை நம்பி வந்த வேலைக்காரர்களும், "ஐயோ! நெருப்புப்பூதம்!" என்று அலறியடித்துக்கொண்டு அங்கிருந்து எடுத்தார்கள் ஓட்டம்! சிட்டாய்ப் பறந்துவிட்டார்கள்! கண்மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள் மின்னலாய் மறைந்துவிட்டார்கள்!

நெருப்புப் பூதம் ஓடோடியும் வந்தது. மாயாவி மந்திரம்பண்ணிய மேடையண்டை—வந்தது; நின்றது; பார்த்தது. மாயாவி மந்திரம் பண்ணுவதற்காக எடுத்து வந்திருந்த என்னென்னவோ கண்ருவிப் பொருள்களெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிந்திச் சிதறிக் கிடந்தன!

நெருப்புப் பூதம் ஒரு நிமிஷம் என்னவோ யோசித்தது. பிறகு, ஏதோ ஒரு முடிவுடன், தங்கப்பட்டி ஜமீந்தார் பங்களாவை நோக்கி விறுவிறுவென்று நடந்தது!

ஐயோ! இன்னும் கொஞ்ச நேரத்தில் அந்த நெருப்புப் பூதம் ஜமீந்தார் பங்களாவில் புகுந்து என்னென்ன அட்டகாசம் பண்ணப் போகிறதோ! யார் யாரை விழுங்கி ரத்த ஏப்பம் விடப் போகிறதோ! என்னென்ன அக்கிரமங்கள் நடக்கப் போகின்றனவோ!

கொஞ்ச நேரம் பறந்தது!

உடல் நடுங்க, குடல் நடுங்கக் குதித்தோடி வந்த ஜமீந்தார் சாமுண்டிப் படையாச்சி, தன் படுக்கை அறையில் போய்க் குபீர் என்று பாய்ந்து புகுந்தார். டொப்பென்று கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டார். கட்டிலில் போய்த் தொப்பென்று விழுந்தார். சுருண்டு முடங்கிப்

பேசாமல் படுத்துக்கொண்டார். அவர் உடல் ஆடிய வேகத்தில் கட்டில்கூடக் கிடுகிடுவென்று ஆட ஆரம்பித்தது !

மாயாவியும், வேலைக்காரர்களும் எப்படி ஓடினார்கள் எங்கே ஓடினார்கள் என்றே தெரியவில்லை ! யாருக்குத் தெரியும் ?

பங்களாவில் ஒரே களேபரம் !

ஜமீன் வேலைக்காரர்கள், பவானி எல்லோரும் போய் ஜமீந்தாரைக் கதவைத் திறக்கச்சொல்லி எவ்வளவோ கத்தியும் பயனில்லை ! கடைசியில், பவானி எவ்வளவோ மன்றாடிய பிறகு, ஜமீந்தார் கதவைத் திறந்தார். எல்லோரும் ஜமீந்தாரைச் சூழ்ந்துகொண்டார்கள். பவானி அவர் மடியில் போய் உட்கார்ந்து கொண்டாள். ஜமீந்தார் சுடுகாட்டில் நடந்த—நேரிலே கண்ட நெருப்புப் பூதத்தைப் பற்றி ஒன்றும் இரண்டுமாய் அளந்து கொண்டிருந்த சமயத்தில்—

" ஓஹோ ! ஓய்ய்...! டேய் மகனே ! பயப்படாதே ! சொல்றதைக் கேளுடா ! ச்ச்...ஸ்ஸ்..."—இந்தக் திடீர்க் கூச்சலைக் கேட்ட எல்லோரும் திடுக்கிட்டுப் பயந்து திரும்பிப் பார்த்தார்கள்.

ஜன்னலுக்கு வெளியே—அதாவது பூங்காவனத்து மகிழமரத்தடியிலே அந்தச் சுடுகாட்டு நெருப்புப் பூதம் திகு திகு வென்று கொழுந்துவிட்டெரியும் நெருப்புச் சட்டியுடன் நின்றுகொண்டிருந்தது !

அவ்வளவுதான் ! அடுத்த விநாடி, அங்கிருந்த எல்லோரும் ஆளுக்கொரு பக்கமாகப் பிய்த்துக் கொள்ளப்போகும் சமயத்தில்......

" ஓடாதீங்க ! ஓடினாக்க ஹதம் பண்ணிடுவேன் ! சொல்றதைக் கேளுங்கடா !"—மகிழமரத்தடி நெருப்புப் பூதம் சாந்தமாய் உறுமியது !

பூதத்தின் உறுமலைக் கேட்ட எல்லோரும் அசைவற்று நின்றார்கள். பவானி தன் அப்பாவை இறுக அணைத்துக் கொண்டு உயிர் நடுங்கிக் கிடந்தாள் !

சிறிது நேரம் பயங்கர அமைதி !

பிறகு, அந்தப் பூதம் தனது பயங்கரக் குரலில் நிதான மாய்ச் சொன்னது :

"ஓய், ஜமீந்தார்! அந்த மாயாவியை லேசுப்பட்டவ னென்று நினைக்காதே! அவன் மகாபாவி! கொலைகாரன்! உன் குடும்பத்தை அழிக்கவந்த பூதம்! ஸ்...ஸ்ஸ்...ஓஹோ! ஹோ..." என்று ஓரிரண்டு விநாடிகள் அப்படியும் இப்படி யும் ஆடிவிட்டு பூதம் மீண்டும் சொல்லவாரம்பித்தது :

"ஏய் சாமுண்டி! உன் மகனைக் கொன்னுப் போட் டவன் சிங்கநாதபுரத்தான் இல்லே. வேறொருத்தண்டா, வேறொருத்தன்! ஓஹோ! ஓஹோ! உஸ்ஸ்...உஸ்ஸ்... நாளை நடுராத்திரிக்கு, அந்த மாயாவியைக் கூப்பிட்டு, காளி பூஜை போடுங்கடா! நான் நிக்கிற இதே இடத்துலே போடுங்கடா ..அப்போ உன் மகனைக் கொன்றவனைக் காட்டுறேண்டா!...ஓய்...ஓ...ஹா...! ஓஹோ!" என்று பயங்கரமாய்க் கத்திக்கொண்டே இடுப்பிலிருந்து எதையோ எடுத்து, நெருப்புச் சட்டியில் தூவியது நெருப்புப்பூதம்!

மறு விநாடியே, நெருப்புச் சட்டியிலிருந்து குபீல், குபீலென்று வெண்ணீலப் புகை மண்டலம் கிளம்பிப் பரவியது! கொஞ்ச நேரத்தில், அந்தப் பூங்காவன்மே ஒரே புகைக்காடாய் ஆகிவிட்டது!

பூங்காவனத்தில் மண்டிக்கிடந்த புகைப் படலம் கொஞ்சம் கொஞ்சமாக வானத்தை நோக்கி ஊர்ந்து சென்று மறைந்தது.

எல்லோரும் அந்தப் பூதம் நின்ற இடத்தைப் பார்த் தார்கள்.

அங்கே பூதத்தைக் காணவில்லை!

ஆனல்—அது நின்ற இடத்தில் பூதத்தின் நெருப்புச் சட்டி மட்டும் கரும்புகையைக் கக்கிக்கொண்டிருந்தது!

எல்லோரும் ஆச்சரியம் தாளாமல் "ஆ!" என்று வாயைப் பிளந்தார்கள்.

ஓரிரண்டு நிமிஷங்கள் வரைக்கும் அதிசயம் கலந்த அமைதி!

பிறகு —

ஜமீந்தார், பவானியை அழைத்துக்கொண்டு என்னவோ சிந்தனையுடன் மேல்மாடியை நோக்கி நடந்தார். அங்கிருந்த மற்றவர்களும் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து போய்விட்டார்கள்.

அதன் பிறகு —

கொஞ்ச நேரம் போயிற்று.

"சபாஷ்! நம்மை யாரும் கண்டுபிடிக்கலே. அது வரைக்கும் ரொம்ப நல்லதுதான்!" என்று வெற்றிக் களிப்புடன் முணுமுணுத்துக் கொண்டே இத்தனை நேரமும் நெருப்புப்பூதம் வேஷம்போட்டு கண்டவரைக் கதிகலக்கிவிட்டு ஓட்டோடியும் சென்று பூங்காவனத்துத் தண்ணீர்த் தொட்டியில் பதுங்கியிருந்து கொஞ்சநேரம் கழித்து தொட்டித் தண்ணீரில் தான் உடல் முழுவதும் பூசியிருந்த கரியை நன்ருகக் கழுவிவிட்டுக் கொண்டு வெளியே வந்து நின்று புன்னகைத்தான் அமுதன்! ஆ!

## எட்டாம் அத்தியாயம்

**ம**று நாள் மாலை நேரம்.

மேற்கு அடிவானத்து விளிம்பில் செத்துக்கொண்டிருந்த மாலைச்சூரியன், ரத்தச் சிவப்பைக் கக்கிக் கக்கி அடிவானத்தை ஒரே......ரத்த மயமாய் ஆக்கிக்கொண்டிருந்தான்!

சூரியனின் இந்தக் கோரக் காட்சியைக் கண்ணசையாமல் பார்த்தபடி, பங்களா மேல் மாடியில் ஓர் அழகிய பிரம்பு நாற்காலியில் தாடையில் கையை ஊன்றியபடி தன்னந்தனியாக மௌனமாய் அமர்ந்து கிடந்தாள் ஜமீந்தார் மகள் பவானி. அவளுடைய எண்ணமெல்லாம், நேற்று ராத்திரிக் கண்ட நெருப்புப் பூதத்தைப் பற்றியும், முந்தாநாள் ஓடிப்போன அமுதனைப் பற்றியுமே லயித்துக் கிடந்தது.

தனிமை! மௌனம்! அமைதி!

பவானி பதுமையாய்க் கிடந்தாள்.

கொஞ்ச நேரம் நகர்ந்தது.

"பவானி!"—ஆவல்—அன்பு ததும்பும் குரல் கேட்டதும், எண்ணக் கடலில் ஆழ்ந்து கிடந்த பவானி டகாரென்று திரும்பிப் பார்த்தாள்.

பின்புறம் பரட்டைத் தலையுடன், வெளிறிய கண்களுடன், களைத்த முகத்துடன் சோர்ந்து நின்றுகொண்டிருந்தான் அமுதன்!

பவானி திடுக்கிட்டாள்! சரேலென்று எழுந்தாள்! "டேய், அமுதா! எங்கேடா ஓடிட்டே!" என்று ஆசை வெடிக்கக் கூவிக்கொண்டே ஜிவ்வென்று பாய்ந்தாள்!

'டபக்'—பவானி, அமுதனைப் பிடித்துக்கொண்டாள்.

சிறிது நேரம்வரை மௌனம்! அமைதி!

பிறகு—

"ஏண்டா, உனக்குப் பைத்தியமா, என்னடா? எதுக்கு அப்படி ஓடினே? உம், எங்கேடா ஓடினே? ஆமா, உனக்குச் சங்கதி தெரியுமா? நேத்து ராத்திரி ஒரு நெருப்புப் பூதம்... அம்மாடி! நெனைச்சாக்கூட ஒரே... பயம்மாயிருக்குடா!" என்று தனது பூங்கரத்தினால் முகத்தை அழுத்தி மூடித் திறந்தாள் பவானி.

அமுதன் நெஞ்சுக்குள் சிரித்துக்கொண்டான்.

"டேய், அமுதா! அந்தப் பூதம்......" என்று மேலும் தொடர்ந்தாள் பவானி. அமுதன் டக்கென்று இடை மறித்தான்.

"அதெல்லாம் அப்புறமாப் பேசிக்கலாம். இப்ப எனக்குப் பசி உயிரை வாட்டுது! சீக்கிரமாப் போய்ப் பலகாரம் எடுத்துக்கிட்டு வா!" என்று பதைத்தான்!

"சரி; வா கீழே போகலாம்" என்று முன்னே நடந்தாள் பவானி. அமுதன், அவள் பின்னாடியே, "ஊம்! இன்னைக்கி ராத்திரிக்கி, ஒரு பெரிய கொலைகாரனைக் கண்டுபிடிச்சுக் கொடுத்த பெருமை எனக்கு ஏற்படப் போகுதாக்கும்!" என்று பேரானந்தக் களிப்புடன் முணுமுணுத்துக்கொண்டே மெய்ய நடந்து சென்றான்!

நேரம் தத்தித் தத்தி ஊர்ந்து நகர்ந்து பிறகு ஓடியது!

நள்ளிரவு!

பூங்காவனத்தில் ஜெஜே ஜெஜேவென்று ஒரே கூட்டம்! தங்கப்பட்டிக் குடியானவர்களெல்லாம் கல்லும், கழியுமாய் வைத்துக்கொண்டு காத்திருந்தார்கள்! என்னென்னவோ முணுமுணுத்தபடி, யாரையோ ரொம்ப ரொம்ப ஆத்திரத்துடன் எதிர்பார்த்துக் கிடந்தார்கள்!

யாரை எதிர்பார்த்திருக்கிறார்கள்?

தங்கப்பட்டி ஜமீந்தாரின் அருமை மகனும், தங்கப்பட்டி மக்களின் அன்பைக் கவர்ந்த நல்லவனுமாகிய ராஜமாணிக்கத்தைக் கொன்றவனை - நெருப்புப் பூதம் காட்டிக் கொடுக்கவிருக்கும் அந்தக் கொடும்பாவியைத்தான்!

அந்தப் படுபாவி யாரோ?

பூஜை ஆரம்பமாயிற்று!

உடுக்கையும், பம்பை வாத்தியமும் முழங்கின. சற்று நேரம் கழித்து, எல்லாவற்றையும் நிறுத்தி அமைதியை உண்டாக்கிவிட்டு, மாயாவி நாகமுத்து நாச்சியார் மந்திரம் ஜபிக்க ஆரம்பித்தார்.

கொஞ்சம் கொஞ்சமாக அங்கிருந்த ஜமீந்தார், எல்லோருக்கும் பயம் கவ்வ ஆரம்பித்தது! மாயாவிக்கு உயிர் லேசாக நடுங்க ஆரம்பித்தது! ஜமீந்தார், இன்னும் நாலைந்து வேலைக்காரர்களைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டார். அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பவானி, தன் அப்பாவின் மடியில் போய் உட்கார்ந்து கொண்டாள். இத்தனை நேரம் தன் பக்கத்தில் உட்கார்ந்து கண்டதைக் கேட்டு நச்சரித்துக்கொண்டிருந்த அமுதனை, "டேய் அமுதா! இன்னும் கிட்ட வந்துடு!" என்று சொல்லிக்கொண்டே திரும்பிப் பார்த்தாள். இத்தனை நேரமும் தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அமுதனைக் காணோம்!

பவானிக்குத் தூக்கிவாரிப்போட்டது! அங்கு கூடியிருந்த கும்பலிலே அமுதனைத் தேடினாள்.

எங்கும் அமுதனைக் காணோம்!

எங்கே போனான்?

மாயாவி, தன் கையிலிருந்த கபாலத்தை வானத்தை நோக்கி நீட்டிப்பிடித்து ஆவேசம் வந்தவனைப்போல் உறும ஆரம்பித்தான்!

"ஜேய்... சண்டி! சாமுண்டி! காளி! கபாலி! ஜேய்ய்...!" மாயாவி டக்கென்று வாயை அடக்கிக்கொண்டான்! அவன், பூங்காவனத்து எதிர்த்திசை வேலியண்டை அடர்ந்து படர்ந்து கிடந்த — இருள் சூழ்ந்த — இடத்தில் குபுகுபுவென்று எரியும் நெருப்புச் சட்டியைக் கண்டதும் அவன் அங்கமெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கவாரம்பித்தது! அவன் "பேப்...... பே..." என்று வாய் குழறினான்!

மாயாவியின் உளறலையும், உதறலையும் கண்ட ஜமீந்தார் எல்லோரும் விழிவிழித்த மறுகணமே—

"ஹோ! ஹோய்ய்...! ஓ...ஹா! ஓ...ஹா!" என்று கிடுகிடுத்த பயங்கரக் கூச்சலைக் கேட்டதும் எல்லாரும் பயந்து நடுங்கித் திரும்பிப் பார்த்தார்கள்.

நெருப்புப்பூதம் அவர்களை நோக்கி ஓடிவந்தது !

அவ்வளவுதான் !

கூடியிருந்த கும்பலில் முக்கால்பாகம் பிய்த்துக்கொண்டது ! கால்வாசிப் பேர்கள் மிஞ்சினார்கள் !

பூதம் வந்தது. நடுநடுங்கும் மாயாவியைக் கண்டு "ஓஹ் ஹோ !" என்று பயங்கரமாய்ச் சிரித்தது ! மீண்டும் மீண்டும் சிரித்தது !

ஒரே... வெறிச் சிரிப்பு !

பூதம் சிரிப்பை அடக்கிக்கொண்டது. திரும்பி, கண் விழிபிதுங்க 'பெப்பே...' என்று விழித்துக்கொண்டிருக்கும் ஜமீந்தார் சாமுண்டி படையாச்சியைப் பார்த்தது. அவர் அருகில் நெருங்கியது.

ஜமீந்தாருக்குச் சர்வமும் ஒடுங்கியது ! அவர் உடல் தடதடவென்று தாளம்போட, கைகூப்பியவாறு மெல்ல எழுந்து நின்றார். அவர் பின்புறமாய் அவர் கீழே விழுந்து விடாதபடி பிடித்துத் தாங்கிக்கொண்டு மறைந்திருந்தார்கள் வேலைக்காரர்கள்.

பூதம் உறுமியது !

"ஜமீந்தார் ! உங்க அருமை மகனையும், அவனுடைய அருமை நாய், ராஜாவையும் கொன்னுபோட்ட 'நாகா' இதோ, இவன்தான் ! பிடித்துக் கட்டுங்கள் !" என்று, நடுங்கிக்கொண்டிருந்த மாயாவியைச் சுட்டிக்காட்டிவிட்டு நெருப்புப் பூதம், குபாரென்று மாயாவியின்மீது பாய்ந்தது!

'டொக் !'கென்று ஒரு குத்து !

பாய்ந்து வந்த நெருப்புப் பூதத்தை ரொம்ப மூர்க்கத்தனமாகத் தாக்கினான் மாயாவி ! நெருப்புப் பூதம், "ஐயோ பவானி !" என்று வீறிட்டு அலறித் தொப்பென்று கீழே விழுந்தது ! விழுந்ததும், அதன் வேஷம் கலைந்தது ! அமுதன் தெரிந்தான் !

அமுதனைக் கண்ட பவானி "ஆ, அமுதா!" என்று கத்தினாள்!

மறு கணம்—

அருகில் விழுந்துகிடந்த நெருப்புச் சட்டியில், மாயாவி எதையோ தூவினான்! குபீரென்று ஒரே புகை! கரும் புகை!

ஜமீந்தார் "ஏய் படுபாவி! என் மகனைக் கொன்னவன் நீயா? உம். பிடியுங்கள் இவனை!" என்று கூவிக் கொண்டே, புகைப் படலத்திற்குள் மறைந்தார்!

'டகார்' என்று குத்து!

ஜமீந்தார் மண்ணிலே சாய்ந்தார்!

அப்புறம் — பூங்காவனத்தில் ஒரே களேபரம்!

அந்தச் சமயத்தில் — காற்று வீசியது! கரும்புகை மறைந்தது. எல்லோரும் அந்தக் கொலைகார மாயாவியைத் தேடியலைந்தார்கள்!

மாயாவியைக் காணோம்!

நெருப்புப் பூதம் வேஷம் போட்டுத் துப்பறிந்த அமுதனைத் தேடினார்கள். அவனையும் காணோம்!

எல்லோரும் உடல் வெடவெடக்க ஏமாந்து நின்றார்கள்!

நேரம் பையப் பைய ஊர்ந்தது; நகர்ந்தது; நடந்தது; ஓடியது!

கவ்விக் கனத்திருந்த காரிருள் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக்கொண்டிருந்தது! பகல் கொஞ்சம் கொஞ்சமாக உருப்பெற்றுக் கொண்டிருந்தது!

பொழுது விடிய இன்னும் கொஞ்ச நேரந்தான்!

அந்த நேரத்திலே—

தங்கப்பட்டி எல்லைக்கும், சிங்கநாதபுரத்து எல்லைக்கும் நடுவிலுள்ள கோர மலையுச்சியிலே, வெண்ணிற மேகங்களும், பனிப் படலமும் கவ்விக்கொண்டிருந்தன! ஊர்ந்து செல்லும் மேகங்களையும், பிசுபிசுக்கும் பனி மழையையும் அலட்சியப்படுத்திக்கொண்டு மலையுச்சியை நோக்கி ரொம்ப வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தான் அந்த மாயாவி பயங்கர நாநா! அவனுடைய எமப்பிடியில் அகப்பட்டு மூர்ச்சித்து, அவனுடைய தோளில் உயிரற்ற பிணம்போல் தொங்கிக் கிடந்தான் அமுதன்! ஆ!

சிறிது நேரத்திற்குள்—

நாநா மலையுச்சிக்கு வந்தான். பிரம்மாண்டமாய், செங்குத்தாக நிமிர்ந்து நிற்கும் ஒரு மலைப்பாறையண்டை வந்ததும் டக்கென்று நின்றான். சுற்றுமுற்றும் பார்த்தான்.

ஒரே... மேகக் கூட்டம்! ஒரே... பனி மழை!

நாநா, தோளில் கிடந்த அமுதனைச் சரியாகத் தூக்கிப் போட்டுக்கொண்டு "ஜேய்ய்...... சக்தி!" என்று கர்ஜித்தான்!

மறு நிமிஷம், 'கடகட'வென்று பாறை உருண்டு நகர்ந்தது! அந்தப் பாறைக்கு அடியில்—

இருள் படர்ந்த—பயங்கரம் தழுவிய—ஒரு சுரங்கம்!

நாநா, சுரங்கத்துப் படியில் மெதுவாக இறங்கினான். அவன் உள்ளே சென்று மறைந்த மறு விநாடியே, மறுபடியும், அந்த மலைப்பாறை 'கடகட'வென்று உருண்டு நகர்ந்து வந்து சுரங்கத்து வழியை மூடிக்கொண்டது! சிறிது நேரம் பறந்தோடியது!

சுரங்கத்து ஒற்றையடிக் குகை வழியாய் வெகுதூரம் குனிந்தபடி நடந்து சென்ற நாநா, சுரங்கத்துக்கு அடியிலிருந்த விசாலமான இடத்தை அடைந்ததும் சக்கென்று நின்றான். எதிர்ப்புறமாயுள்ள மற்றொரு இருட் குகையைக் கூர்ந்து பார்த்தான். குகை மூடிக்கிடந்தது, பெரிய பாறையால்!

"ஜெய்ய்...சக்தி! டேய், காட்டேரி! பைசாசு" என்று பயங்கரமாய்க் கத்தினான். அவனுடைய அந்தப் பேய்க் கூச்சல், அந்த இருட் சுரங்கத்தில் பல வினாடிகள் வரைக் கும் அலைமோதிய பின் மறைந்தது!

ஒரு நிமிஷத்திற்குள்—

இருட் குகையிலிருந்த நாலைந்து தடியர்கள், மூடிக் கிடந்த பாறையைத் திறந்து குபுகுபுவென்று வெளியே பாய்ந்தோடி வந்து நாகாவைக் கண்டதும் பயந்து ஒடுங்கி அடக்கத்துடன் நின்றார்கள்!

நாகா அவர்களைக் கூர்ந்து பார்த்து "உம், தீவட்டி களைக் கொளுத்துங்கடா!" என்று உறுமினான்!

சுரங்கத்தின் மூலைக்கு மூலை தீவட்டிப் பந்தங்கள் கொளுத்தப்பட்டன!

சுரங்கத்து இருளுடன், தீவட்டிப் பந்தங்களின் மங்கிய வெளிச்சம் உறவாட ஆரம்பித்தது!

நாகா, தோளில் கிடந்த அமுதனைத் தூக்கி, அருகில் கிடந்த ஒரு தட்டையான பாறையின்மீது தொப்பென்று வீசி எறிந்தான்! பாறையின்மீது விழுந்த அமுதன் உணர்ச்சியடைந்து விருட்டென்று துள்ளித் துடித்து, பாறையிலிருந்து தொப்பென்று கீழே விழுந்ததும், சரே லென்று எழுந்து நின்றான். தன்னைச் சூழ்ந்துள்ள சுரங் கத்துக் காட்சியைக் கண்டான். கதிகலங்கினான்! மதி மருண்டான்! தன் எதிரில் பயங்கரமாய் நிற்கும் மாயாவி நாகாவைப் பார்த்தான்.

விஷயம் விளங்கியது!

அசையாமல் நிற்கும் அமுதனைக் கண்ட நாகா அகோர மாய்ச் சிரித்தான். சிரித்துக்கொண்டே "என்னடா, என் துப்பறியும் சிங்கமே! இனிமேல் என்ன செய்யறதா யோசனை?" என்று கேட்டுவிட்டு இடி இடி யென்று மீண்டும் மீண்டும் சிரித்தான். அவனுடைய வெறிச் சிரிப்பு சுரங்கத்தில் எதிரொலித்தது!

அமுதன் நானாவையே வெறிக்க வெறிக்கப் பார்த்தபடி சிலையாய் நின்றான்.

நானா, கொஞ்ச நேரத்திற்குள் தான் அணிந்திருந்த கறுப்பு அங்கி, பொய்த் தாடி, மீசை எல்லாவற்றையும் அகற்றிவிட்டுச் சுயரூபத்தில் நின்றான்.

அமுதன், அந்தப் புது உருவத்து நானாவைப் பார்த்துப் பிரமித்தான். இப்போது நானா, ஏறக்குறைய ஒரு வேட்டைக்காரனைப்போல், பிடித்தமான கறுப்பு முழுக்கால் சட்டையும், முண்டாப் பனியனும் அணிந்து கம்பீரமாயிருந்தான்.

"என்னடா விழிக்கறே, வெண்டைக்காய்!" என்று சிறிக்கொண்டே அமுதனை நெருங்கினான் நானா.

அமுதனுக்கு அவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்ததோ? அவன் நானாவை அலட்சியமாய்ப் பார்த்து ஆக்ரோஷமாகக் கூவினான்.

"வெண்டைக்காய்னு யாரைடா சொல்றே, சுண்டைக்காய்! என்னைக்கிருந்தாலும் உன்னை...... பொறு மாமா, சும்மா துள்ளாதே! உனக்குச் சரியான தண்டனை காத்திருக்குது!" என்று கேலியும், கிண்டலும், கோபமும், குரூரமுமாய்ப் பேசினான் அமுதன்.

மறு கணம்—

'பளீர்!' என்று ஒரு அறை!





## ஒன்பதாம் அத்தியாயம்

"ஆ!" என்று அலறிச் சுருண்டு தடுமாறித் தொப்பென்று கீழே விழுந்தான் அமுதன்! ஐயோ,! பாவம்!

"சுண்டைக்காய்! நான் சுண்டைக்காய்! இந்த வெண்டைக்காய்ப் பயலுக்கு நான் சுண்டைக்காய்! ஏண்டா!" என்று புலியாய் உறுமிக்கொண்டே பாய்ந்து சென்று அமுதனைத் தூக்கி நிறுத்தி உலுக்கினான் நானா!

அமுதன், நானாவின் குரூரமான முகத்தை உற்றுப் பார்த்து, தைரியத்தைக் கைவிடாமல் "ஏய் நானா! இந்தச் சமயத்துலே நீ என்னை என்ன வேணும்னாலும் செய்யலாம். அடிக்கலாம்; உதைக்கலாம்; கத்தியாலே செதில் செதிலாக வெட்டலாம். பாறையைத் தள்ளிக் கூழ்கூழாக நசுக்கலாம்! ஆனாலும், நீ உயிரோடு மட்டும் வாழ முடியாது! உன் கழுத்துலே போட்டுவைச்சிருக்கிற தூக்குக் கயித்தை உன்னாலேயும் கழற்ற முடியாது! உன்னைப் படைச்ச அந்தப் பாவிக் கடவுள் வந்தாலும் கழற்ற முடியாது!" என்று உறுதியாகச் சொன்னான்!

நானா, கபாரென்று அமுதனைத் தூர வீசி எறிந்தான். அமுதன் சற்று தூரத்திலிருந்த ஒரு பாறையின்மீது போய்டங்கென்று மோதிக்கொண்டான். அவன் மண்டை

யிலிருந்து ரத்தமாய் வழிய ஆரம்பித்தது! ரத்தம் சொட்டு வதைக் கண்ட அமுதனுக்கு உடல் பதைத்தது! ஜீவன் குதித்தது!

ஒரே... ஆக்ரோஷம்!

அமுதன் குபீரென்று எழுந்தான். அருகில் கிடந்த ஒரு சிறு மலைப் பிஞ்சு, நாநாவின் பின்புறமாய் எரிந்து கொண்டிருந்த தீவட்டியைத் தாக்கியது!

குப்பென்று அணைந்த தீவட்டி வெண் புகையைக் கக்கியது!

ஒரே...... வேப்ப எண்ணெய் நாற்றம்!

அதற்குள், நாநாவின் ஆட்கள் அமுதனை இரும்புப் பிடியாய்ப் பிடித்து அங்கிருந்த ஒரு பெரும் பாறையில் இறுகக் கட்டிப்போட்டுத் தூர நின்ருர்கள். அவர்களுக் குப் பயங்கர நாநாவை இவ்வளவு துணிச்சலுடன் எதிர்க் கும் அமுதனைப் பார்க்கப் பார்க்க ஒரே... அதிசயமா யிருந்தது!

நாநா, கட்டுண்டு கிடக்கும் அமுதனை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டே அவன் அருகில் வந்தான்.

"டேய்! என்னை இன்னும் சரியாகப் புரிஞ்சுக்கலை நீ!"

"புரிஞ்சுக்கிட்டேண்டா, பொழைப்புக்கெட்ட நாயே! நீ ஒரு கொலைகாரன்! உறவாடிக் கெடுக்கிற உலுத்தன்! படுபாவி!"

"சட்! என்னடா அடுக்காகப் பேசுறே அறுதைக் கழுதே! ஜாக்கிரதை! உன்னை உயிரோடு நெருப்பிலே போட்டுப் பொசுக்கிடுவேன்! உஷார்!"

"அட பூ! ஹூம்! உன் பசப்புக்கெல்லாம் இந்தச் சிங்கக்குட்டி பயந்துடாதுடா பைசாசமே! உன்னுலே என்ன செய்ய முடியுமோ செய் பார்க்கலாம்! நான் ஒரு சிலந்தி! இந்தச் சிலந்தி கட்டி வைச்சிருக்கும் கூட்டுலே சிக்கித் தவிக்கிற ஒரு சித்தெறும்பு நீ! நினைவு வைச்சுக்க!"

"என்ன, என்ன? என்ன சொன்னே? நீ ஒரு சிலந்தி! ஹாஹ்ஹாஹ்ஹாஹா! நீ ஒரு சிலந்தி! நான் என்ன தெரியுமா? அந்தச் சிலந்தியைக் கொத்திக்கிட்டுப் போகும் சிட்டுக் குருவி நான்!"

"குலைக்காதேடா நாயே! உன்னாலே ஆனதை நீ பாரு! என்னாலே முடிஞ்சதை நான் பார்க்கிறேன். எதுக்கு வெட்டிப் பேச்சு?"

'உன்னாலே ஆனதைப் பாரு! இதோ பார்க்கிறேன்!' என்று ஈவிரக்கமின்றி அமுதனின் வயிற்றிலே 'தொம்!' மென்று எட்டி உதைத்தான் நாநா!

"ஆ... அம்மா" என்று உயிர் ஒடுங்க ஓலமிட்டான் அமுதன்—அவன் தலை தொங்கிவிட்டது!

திடீரென்று மூர்ச்சையாகிவிட்ட அமுதனைக் கண்ட நாநா பயங்கரமாய்ச் சிரித்தான்! பல விநாடிகள் வரைக்கும் சிரித்தான்! சிரித்து முடித்துவிட்டு, சிலையாய் நிற்கும் தன் ஆட்களைப் பார்த்து, "உம்! இந்தக் கத்தரிக்காய்ப் பிஞ்சை கவனிச்சிக்கிடுங்க. நான் எங்க அண்ணன் வீட்டுக்குப் போய்வரேன்!" என்று சொல்லிவிட்டு மற்றொரு குகைக்குள் நுழைந்து, சட்டையணிந்துகொண்டு சுரங்கத்தைவிட்டு வெளியே சென்றான் நாநா.

கொஞ்சம் நேரம் புதைந்துபோயிற்று.

சுரங்கத்தில் சுடுகாட்டு அமைதி!

இத்தனை நேரமும் மூர்ச்சித்துக்கிடக்கும் அமுதனையே விழியசையாமல் பார்த்து நெஞ்சம் உருகிய நாநாவின் ஆட்களில் ஒருவனாகிய காட்டேரி, "ஹூம்! ஐயோ பாவம்! யார் பெத்த புள்ளையோ!" என்று மனமுருகிச் சொல்லித் திரும்பினான். அவன் பக்கத்தில் கற்சிலையாய் நின்று கண்ணீராய் வடிக்கும் பைஸாசுவைக் கண்டதும் திடுக்கிட்டான்! 'டேய் பைஸாசு ஏண்டா அழறே?' என்று பரபரப்புடன் கேட்டான்!

பைஸாசு கண்களைத் துடைத்துக்கொண்டு சொன்னான்.

“ இதோ இவன் — இன்னும் கொஞ்ச நேரத்துக்குள்ளே நாநாவினுடைய நச்சுக் கத்திக்கு இறையாகப் போகிற இந்தப் பையன்—இவன் பேர் அமுதன் !’

“ ஆ ! அமுதனு ? அது உனக்கு எப்படித் தெரியும் ? ”

“ பேர் மட்டுமா தெரியும்? அவனுடைய வலது கை மோதிர விரலும், சுண்டு விரலும் ஒண்ணு ஒட்டிக்கிட்டிருக்கும் ! ”

“ ஆ ! அப்படியா ! ” என்று வாயைப் பிளந்துகொண்டே காட்டேரி அமுதனின் அருகில் ஓடினுன். வலது கை விரலைப் பார்த்தான். பைஸாசு சொன்னது போலவே மோதிர விரலும், சுண்டு விரலும் ஒன்ருக ஒட்டிக்கொண்டிருந்தன !

காட்டேரிக்கு ஒரே ஆச்சரியம் ! பைஸாசுவைப் பார்த்தான். அவன் கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. காட்டேரிக்கும் அழ வேண்டும்போலிருந்தது. ஆனுல் அழவில்லை ; சமாளித்துக்கொண்டான். பைஸாசின் அருகில் போனுன்.

“ டேய், பைஸாசு, இந்தப் பையனை உனக்குத் தெரியுமா ? ”

“ தெரியும் ! அவன் உயிரைக் காப்பாத்தினதே நான் தான் ! ”

“ நீயா ? ”

“ உம் ! ”

“ எனக்கு ஒண்ணும் புரியவில்லையே ! ”

“ சொல்றேன். புரிஞ்சுக்க ” என்று பைஸாசு கண்களைத் துடைத்துக்கொண்டு அங்கிருந்த ஒரு பாறையின் மீது உட்கார்ந்தான். காட்டேரியும் அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

பைஸாசு சொன்னுன் :

“ சுமார் பதினேழு வருஷங்களுக்கு முன்னே நம்ப

சிங்காரதபுரத்து ஜமீந்தாருக்கு ஒரு ஆண் குழந்தை இருந்ததே, தெரியுமா?"

"ஓ... தெரியுமே! அந்தக் குழந்தை ரொம்ப அழகாயிருந்துச்சே! அது அவ்வளவு அழகாயிருந்ததுனுலே தானே, ஏதோ தேவதை தூக்கிக்கிட்டுப் போயிடுச்சு!"

"ஹஉம்! தேவதையும் தூக்கிக்கிட்டுப் போகலே தேவனும் தூக்கிக்கிட்டுப் போகலே!"

"ஊரெல்லாம் அப்படித்தானே—ஏன்? நம்ப நாநா ஐயா கூட அப்படித்தானே சொன்னரு!"

"சொன்னரு சொரக்காயிலே உப்பு இல்லேன்னு! அந்தப் படுபாவி நாநாதான் அந்த அழகுக் குழந்தையைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டான்!"

"ஆ! நம்ப நாநாவா—நம்ப ஜமீந்தார் ஐயா தம்பி நாநாவா தூக்கிக்கிட்டுப் போயிட்டாரு?"

"உம்!"

"ஏன்?"

"அந்தக் குழந்தை பெரிசா ஆச்சுன்னு ஜமீன் அதுக்குச் சொந்தமாகிடுமே! அது இல்லேன்னுக்க, ஜமீன் நாநாவுக்குச் சொந்தமாயிடும். அதுக்காகத்தான்!"

"அடப் பாவி! அப்புறம் அந்தக் குழந்தையைச் சாகடிச்சுட்டானு?"

"இல்லே, என்கிட்டே கொடுத்து மலேமேலிருந்து போட்டு சாகடிக்கச் சொன்னன்......"

"ஐயோ! அப்புறம் நீ சாக..."

"நான் அவ்வளவு கல்நெஞ்சனில்லேயே! நான் அந்தக் குழந்தையை ராவோடு ராவாத் தூக்கிக்கிட்டுப் போய், தமிழோங்கிபுரத்துப் பண்ணேக்காரரிடத்துலே பணங்காசு ஒண்ணும் வாங்காமே கொடுத்துட்டு வந்துட்டேன்! அந்தக் குழந்தைதான் இவன்!"

"ஆ! இவனா? இவனா நம்ப ஜமீந்தார் மகன்?" என்று அதிசயித்துச் சொல்லிக்கொண்டே காட்டேரி சடாரென்று திரும்பி அமுதனைப் பார்த்தான்.

மூர்ச்சை தெளிந்து, இத்தனை நேரமும் பைஸாசு சொன்னதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அமுதன் பைஸாசுவையும், காட்டேரியையும் மாறிமாறிப் பார்த்து விழித்தான்.

அமுதன் மூர்ச்சை தெளிந்திருப்பதைக்கண்ட பைஸா சுக்கும் காட்டேரிக்கும் தூக்கிவாரிப்போட்டது! இரு வரும் சரேல் சரேலென்று எழுந்து நின்றார்கள்! அமு தனைப் பார்த்து விழித்தார்கள்! அமுதன் அவர்களைப் பார்த்து விழித்தான்!

ஒரு நிமிஷ நேரம் விழிப்பிலேயே கழிந்தது!

மறு கணம்—

"பைஸாசு அண்ணா! உண்மையைச் சொல்லுங்க. நான் சிங்கநாதபுரம் ஜமீந்தாரின் மகனா? சொந்த மகனா? இந்தப் படுபாவி நாநா என் சித்தப்பனா? சொல்லு அண்ணா!" என்று பைஸாசுவை நோக்கி உருக்கத்துடன் கேட்டான் அமுதன்.

ஓரிரண்டு விநாடிக்குப்பின், "ஆமாண்டா தம்பி!" என்று சொல்லிவிட்டு "ஓ......!" வென்று அழ ஆரம் பித்தான் பைஸாசு. காட்டேரியும் விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்!

"பைஸாசு அண்ணா! உனக்குத் தெரிஞ்ச இந்த உண்மையைச் சொல்லி, என்னை எங்க அப்பாவிடத்துலே சேத்துடமாட்டியா? அந்தப் படுபாவி நாநாவின் கொடு மைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கமாட்டியா?" என்று பைஸாசுவைப் பார்த்துக் கதறினான் அமுதன்!

"காலம் வந்துட்டுது தம்பி! ஒண்ணும் பயப்படாதே!" என்று உறுதியுடன் சொல்லிவிட்டு எதிர்க் குகைக்குள் வேகமாய் நுழைந்தான் பைஸாசு.

"இனிமேல் ஒண்ணும் பயப்படாதே தம்பி!" என்று குஷியுடன் சொல்லிக்கொண்டே காட்டேரியும் குகைக்குள் சென்றான்!

சுரங்கத்தில் நிச்சலமான அமைதி!

அமுதன் சிந்தித்தான். தனது இளம் வாழ்க்கையில் நடந்த சுழற் காற்றுச் சம்பவங்களை நினைக்க நினைக்க அவனுக்கு ஒரே அதிசயமாயிருந்தது! அவன் உள்ளம் ஏதோ ஓர் இன்ப உணர்ச்சியில் குதித்துக் கும்மாள மடித்தது!

அமுதன் மௌனமாய்க் கிடந்தான். அவனுடைய சிந்தனை தேங்கிய கண்கள் அகஸ்மாத்தாக எதிரிலுள்ள இரண்டு பெரிய பாறைகளின் இடுக்கில் தெரிந்த பெரிய சிலந்திக் கூட்டைக் கவனித்துவிட்டன!

ஒரே... சிந்தனை!

அமுதன், அந்தச் சிலந்திக் கூட்டின் நட்ட நடுவில் அசையாமல் கிடந்த சிலந்திப் பூச்சியைக் கண்ணிமைக்காமல் பார்த்தபடியே என்னென்னவோ சிந்திக்க ஆரம்பித்தான்!

'சக்!'—திடீரென்று எங்கிருந்தோ தவறிச் சிலந்திக் கூட்டில் விழுந்து சிக்கித் துடிக்கும் சிறு பூச்சியைக் கண்டதும் அமுதன் மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பில், ஒளிந்துகொண்டிருந்த வெற்றி எட்டிப் பார்த்து எக்காளமிட்டது.

தான் கட்டி வைத்த சித்திரக்கூட்டில் விழுந்து துடிக்கும் சிறு பூச்சியைக் கண்ட சிலந்திப்பூச்சி, விறுவிறுவென்று, சிறு பூச்சியை நோக்கித் தாவியோடியது!

இன்னும் ஒரு விநாடியில் சிறு பூச்சியின் ஆயுள் அரோகராவாகிவிடும்!

இதைக் கண்ட அமுதன், "ஹூம்! இந்த அமுதன் என்ற சிலந்தி கட்டி வைத்த சித்திரக் கூட்டிலும் அந்த நாகா என்ற சிறு பூச்சியும் இப்படித்தான் சிக்கிக்கொண்

டிருக்கிறது! இன்னும் ஒரு நாளோ? இரண்டு நாளோ? அந்தப் படுபாவியும் சரியான தண்டனை பெற்றுவிடு வான்!'' என்று மனத்திற்குள்ளேயே எண்ணிப் பெரு மூச்சு விட்டான்!

அப்புறம்—?

## பத்தாம் அத்தியாயம்

காலை, பத்து மணி!

சிங்காதபுரத்து ஜமீந்தார் மருதப்ப நாச்சியார் பங்களா வராந்தாவிலுள்ள வெல்வெட் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். அவர் எதிரில் ஒரு பிச்சைக் காரப் பெண் அடக்க ஒடுக்கமாக நின்றுகொண்டிருந்தாள்.

"உம், அப்புறம்?'' என்று அந்தப் பிச்சைக்காரப் பெண்ணை அன்புடன் கேட்டார் ஜமீந்தார்.

"அப்புறம் கேளுங்க மாமா'' என்று உரிமையுடன் சொல்லவாரம்பித்தாள் பிச்சைக்காரப் பெண்.

"அவன் எனக்கு, சொந்த—கூடப்பிறந்த—அண்ணன் மாதிரி! அவன் பெரிய முரடன்! பெரிய புரட்சிக்காரன் மாதிரி, சின்னவங்க, பெரியவங்கன்னு பாக்காம நியாயம் பேச ஆரம்பிச்சுடுவான்! ஜாதின்னு சொல்லிவிட்டாப் போதும்! ரத்தம் கொதிக்கப் பேசுவான்! அதனாலே, அவ னுடைய அப்பா, அம்மா அவனுடைய சினேகிதனுங்க, அந்த ஊராருக்கு எல்லாருக்கும் அவன்மேலே வெறுப்பு! நான் வேலை செய்து வந்த வீட்டாருக்கு அவனைக் கண் டாக்க சிம்ம சொப்பனம்தான்! என்னை அவன்கூடச் சேர வேணும்னு சொன்னாங்க. அடிச்சாங்க......''—பிச்சைக் காரப் பெண் மேலும் சொல்லுவதற்குள் ஜமீந்தார் இடை மறித்தார்.

"ஆமா, உனக்கு அப்பா அம்மா யாருமில்லையா?''

" இல்லேன்னுதான் முதல்லியே சொன்னேனே மாமா! அவங்க இருந்தாக்க நான் ஏன் இந்தமாதிரி..." என்று மேலும் சொல்ல முடியாமல் கண் கலங்கினாள் பிச்சைக் காரப் பெண்.

ஜமீந்தாரின் நெஞ்சம் இளகியது. உள்ளத்தில் பொங்க வாரம்பித்த துக்கத்தை ஒரு வழியாய்ச் சமாளித்துக் கொண்டு, "உம், அப்புறம்?" என்று மறுபடியும் கேட்டார்.

"கேளுங்க மாமா. நான் அவனுக்கு எவ்வளவோ சொன்னேன். சொல்றாப்போல சொன்னாக்க கேக்காதவன் கூடக் கேட்டுத் திருந்துவான். 'கொஞ்சம் சாந்தமாய்ப் பேசுடா 'எடுத்தேன். கவிழ்ந்தேன்னு பேசாதே'ன்னு எவ்வளவோ தடவை சொல்லிப்பார்த்தேன். கடைசியிலே ஆசாமி தன்னையும் மீறிச் சீர்திருத்தம் பேச ஆரம்பித்தான். பைத்தியம் பிடிச்சுப்போய் எங்கேயோ ஓடிப்போயிட்டான். இன்னைக்கு வரைக்கும் நான் அவனை எங்கெங்கேயோ தேடியலையுறேன். கிடைக்கல்லே. எப்படியாச்சும் அவனைக் கண்டுபிடிச்சு, அவனை நல்ல வழிக்குக் கொண்டுவரேன், பாருங்களேன்!" என்று உறுதியாகச் சொல்லி முடித்தாள் பிச்சைக்காரப் பெண்.

"சரி அவனை—உன் சினேகிதனை—நான் கண்டு பிடிச்சுத் தரேன். நீ இங்கேயே இருந்துடு. எனக்கும் பிள்ளை யில்லே. எனக்குப் பிறந்த ஓர் ஆண் குழந்தையையும் தேவதை தூக்கிக்கிட்டுப் போயிடுச்சு. இனி நீதான்......" ஜமீந்தார் பேச்சை முடிப்பதற்குள்—

"என்ன, அண்ணாச்சி, யார் இந்தப் பொண்ணு?"— திடீரென்று கரகரத்த ஒரு குரல்!

ஜமீந்தாரும், பிச்சைக்காரப் பெண்ணும் சடாரென்று திரும்பிப் பார்த்தார்கள். அணிந்திருந்த நீலநிறப் புஷ் கோட்டைத் திறந்துவிட்டுக்கொண்டே டாம்பீகமாய் நடந்துவந்து, ஜமீந்தாருக்கெதிரிலிருந்த பிரம்பு நாற்கா லியில் தொப்பென்று அமர்ந்தான். ஜமீந்தாரின் சொந்தத் தம்பியான நாநா!

பிச்சைக்காரப் பெண் நாநாவைப் பார்த்துப் பயந்தாள்! ஏனோ, அவளுக்கு அவனைக் கண்டதும் கொஞ்சம் பயமாகத்தானிருந்தது.

ஜமீந்தார் நாநாவைப் பார்த்தார். பார்த்து—

"என்னடா தம்பி, என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லே அண்ணாச்சி, நம்ப தங்கப்பட்டி ஜமீந்தாரிடத்துலே என்னைப் பிடிச்சுக்கொடுக்க ஒரு மீன் குட்டி துப்பறிஞ்சுது. அதை......"

"ஆ, யார் அவன்? அப்புறம்?" என்று பதறி நிமிர்ந்து உட்கார்ந்தார் மருதப்பர்.

"அந்த மீன், நான் ஆறு மாசத்துக்கு முன்னே, தங்கப்பட்டி ஜமீந்தார் மகன் ராஜமாணிக்கத்தைக் கொன்னதைக் கூட கண்டுபிடிச்சு......"

"ஐயோ! அப்படீனுக்க ஆசாமி பெரிய ஆளாயிருப்பான் போலிருக்கே!"

"ஹூம்! எவ்வளவு பெரிய ஆசாமியாயிருந்தாலும் இவருகிட்டே ஒண்ணும் நடக்காது அண்ணாச்சி!"

"ஆமா, அவன் இதையெல்லாம் எப்படிக் கண்டு பிடிச்சிருப்பான்? ஆச்சரியமாயிருக்கே!"

"எப்படிக் கண்டு பிடிச்சிருப்பான்? அந்த ராஜமாணிக்கத்தை நான் ஏரியிலே மடக்கிச் சாகடிச்ச அப்போ, அவன் கூட வந்த நாய் என்னை விடாப்பிடியாய்த் துரத்தி வந்திச்சு. நான் அதைக் கொஞ்ச தூரம் ஓட்டம் காட்டி. கடைசியிலே தமிழ்மோங்கிபுரத்துத் துர்க்கைக் கோயில் பக்கத்துலே இருக்கிற இரட்டைக் கிணத்துலே சாகடிச்சுப் போட்டுட்டேன். அதுகூட என் பேர் போட்ட குத்துக் கத்தியையும் போட்டுட்டேன். அப்புறம் என்னுடைய பேர்போட்ட வெள்ளிப் பொடிடப்பியையும் காணோம். அதைப் பார்த்துட்டு......"

"அதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன்!"

"அட, நீ ஒண்ணு ; இப்ப என்ன குடியா முழுகிடுச்சு! அந்தச் சுண்டெலிப் பயலெ, சுரங்கத்துலே கட்டிப்போட்டு வைச்சிருக்கேன் ! இப்ப நீ வந்துதான் அவனுடைய மரண விழாவைத் தலைமைதாங்கி நடத்தி வைக்கணும்!"

"சபாஷ் !" என்று குதித்தார் சிங்கநாதபுரத்து ஜமீந்தார்.

அதே சமயத்தில்—

"எனக்கும் ஒரு சபாஷ் போடுங்க அப்பா !"—திடீரென்று ஒரு வெற்றிக் குரல் !

ஜமீந்தார், நாநா, பிச்சைக்காரப்பெண், அப்போது தான் பலகாரத் தட்டுடன் அங்கு வந்த ஒரு வேலைக்காரன் எல்லோரும் டகாரென்று திரும்பி வாசலண்டை பார்த்தார்கள்.

பங்களா வாசலிலே—

வெற்றியும், வீரமும், ஆவலும், ஆனந்தமும் தாண்டவமாடும் முகத்துடன் இடுப்பின்மீது கையை வைத்துக் கொண்டு ராஜ கம்பீரமாய் நின்று கொண்டிருந்தான் அமுதன் !

பிச்சைக்காரப் பெண் அமுதனைக் கண்டாள் !

அமுதனும், பிச்சைக்காரப் பெண்ணைக் கண்டான் !

மறு கணம்—

"அமுதா !"

"தயாநிதி !"

இத்தனை நாளும் அமுதனைத் தேடியலைந்து பிச்சைக்காரியாய் ஆன தயாநிதி குபீரென்று பாய்ந்தாள் ! அமுதனும் பாய்ந்தான் !

டபக் !

இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டார்கள் !

ஜமீந்தாருக்கும், நாநாவுக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆமாம் ; ஒன்றுமே புரியவில்லை !

ஓரிரண்டு விஞடிகள்வரை மௌனம் !

பிறகு—

அமுதன், ஜமீந்தாரைப் பார்த்தான். அவன், உடலிலே உயிரிலே—ஏதோ ஓர் உணர்ச்சி—ரத்த பாசம்—கிறு கிறுத்தது ! அமுதனைக் கண்ட ஜமீந்தாருக்கும் அப்படித் தான் !

“ அப்பா !”—அமுதன் பாய்ந்தோடினான். ஜமீந்தாரை அப்படியே கட்டியணைத்துக்கொண்டான். ஜமீந்தாரும், தன்னை மறந்து அமுதனை ஆரத் தழுவிக்கொண்டார் !

நாநாவுக்கு மண்டை வெடித்துவிடும் போலாகியது !

“ அண்ணுச்சி ! உனக்குப் பைத்தியமா ! இவன்தான் என்னைக் காட்டிக்கொடுக்க இருந்த அயோக்கியன் ! அவனுடைய பேச்சிலே மயங்கிட்டீங்களே !” என்று நாநா தன் அண்ணன் ஜமீந்தாரைப் பார்த்துக் குமுறினான் ! அவன் உறுமி நிறுத்திய மறு கணமே—

“ மகனுடைய பேச்சிலே அப்பா மயங்கிட்டா பரவா யில்லே ஆனுக்க, கூடப்பிறந்த சகோதரனுக்குத் துரோகம் பண்ணிய, ஒரு தூர்த்தனுடைய பேச்சிலே இவ்வளவு காலமா மயங்கிக் கிடந்தாரே ! அதை விடவா ?” என்று ஆத்திரமும் கோபமும் கொந்தளிக்கும் ஒரு குரல் திடீரென்று எழும்பியது அங்கே !

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

பங்களா வாசலிலிருந்த சூரியகாந்திச் செடியின் பின்னே இத்தனை நேரமும் பதுங்கிக்கிடந்த பைஸாசு வெளியே வந்து நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நின்றான் !

“ இன்னும் கொஞ்ச நேரத்துலே உன்னுடைய மரண விழா என்னுடைய தலைமையிலே நடக்கப்போகுது பார் !” என்று சீறிக்கொண்டே, பக்கத்திலிருந்த பூத்தொட்டி

மறைவிலிருந்து குபீரென்று கத்தியும் கையுமாய் எழுந்து நின்முன் காட்டேரி!

ஜமீந்தாருக்குப் பங்களா மட்டும் தலைகீழாகச் சுழன்றது!

நாநாவுக்கு உலகமே சுழல ஆரம்பித்தது!

அடுத்த வினாடி—

"அதெல்லாம் சரியில்லே! என் அருமை மகனைக் கொன்ற இந்தக் கொலைகாரப் பாவியின் மரணவிழாவை என் தலைமையிலேயே, நானே நடத்தி வைக்கிறதுதான் சரி!" என்று துப்பாக்கியும் கையுமாய், எதிரிலிருந்த மகிழ மரத்தின் பின்னாலிருந்து அமுதனால் அழைத்துவரப்பட்ட தங்கப்பட்டி ஜமீந்தார் சாமுண்டிப் படையாச்சி, சிங்கநாத புரத்து ஜமீந்தாரின் பக்கத்தில் வந்து நின்முர்!

சிங்கநாதபுரத்து ஜமீந்தார் உடல் நடுங்க விழித்தார்!

நாநா உயிர் நடுங்க விழித்தான்!

"தம்பி நாநா! கையை தூக்கிக்கிட்டு நில்லு! தப்பிச்சுப்போக நினைக்காதே! துப்பாக்கியைப் பார்! ரெட்டைக் குழல் துப்பாக்கி! துரோகி!" என்று நாநாவைப் பார்த்து சீறிக் கொந்தளித்து விட்டு, பக்கத்தில் நின்ற பைஸாசுவைப் பார்த்து "டேய், பைஸாசு! என் அருமை நண்பர் மருதப்பர் விஷயம் தெரியாமெ தவிக்கிருரு. உம்! கிடு கிடுன்னு சொல்லு!" என்முர் சாமுண்டிப் படையாச்சி!

பைஸாசு, நாநா செய்த துரோகச் செயல்களை அப்படியே ஒன்றுகூட விடாமல் சொல்லி முடித்தான்!

ஜமீந்தார் மருதப்பருக்கு ரத்தம் கொதித்தது! அவர் நாநாவைப் பார்த்து "அடப் பாவி! கேவலம், வெறும் சொத்து சுகத்துக்காக என் குழந்தையைக் கொல்ல........ அட, சண்டாளா! உன் மரண விழாவை என் தலைமையிலேயே நடத்தி வைக்கிறேன்!" என்று உறுமிய மறு வினாடியே—

நாநா, அங்கிருந்து தப்பியோட நினைத்து ஓரடி எடுத்து வைக்கத் திரும்பினான். அவ்வளவுதான்!

"டுமீல்! டுமீல்!"— சாமுண்டிப் படையாச்சியின் கைத் துப்பாக்கிக் குண்டு, நாநாவின் விலாப்புறத்தில் சரக் சரக்கென்று பாய்ந்தது!

அதே சமயத்தில்—

காட்டேரியின் கைக் கத்தியும் அந்தப் பாவியின் நெஞ்சில் சதக்கென்று பாய்ந்தது!

பயங்கர நாநா குளோஸ்!

அப்புறம்—

ஒரு வாரத்திற்குப் பிறகு—

சிங்கநாதபுரத்து ஜமீந்தாருக்கும் தங்கப்பட்டி ஜமீந்தாருக்கும் பரம்பரை பரம்பரையாய் வளர்ந்து வந்த பகை ஒழிந்து, இப்போது நட்பு—அன்பு கனிந்த நட்பு-மாசற்று வளர ஆரம்பித்தது!

அத்துடன், அமுதனின் உன்னத லட்சியமும், புதிதாக ஆரம்பித்த 'காந்தி நிலயம்' என்ற சங்கத்து மூலமாக நிறைவேறியது!

இப்போது, ஜமீந்தார் மருதப்பர், ஜமீந்தார் சாமுண்டி, அமுதன், அமுதனின் வளர்ப்புத் தந்தையாகிய தமிழோங்கி புரத்துப் பண்ணைக்காரர், அமுதனின் உயிருக்குயிரான தயாநிதி, புதிய சிநேகிதி பவானி, பைஸாசு, காட்டேரி எல்லோரும் ரொம்ப ரொம்பச் சந்தோஷமாய் இருக்கிறார்கள். ரொம்ப ரொம்ப க்ஷேமமாய் இருக்கிறார்கள். இந்தக் கதையை எழுதிய நானும் ரொம்ப ரொம்ப க்ஷேமமாய் இருக்கிறேன். இந்தக் கதையைப் படித்து வந்த தமிழ் நாட்டுத் தம்பி தங்கைகளாகிய உங்கள் க்ஷேமம்—?

அறிந்துகொள்ள ரொம்ப ஆவல்!

எழுதுகிறீர்களா? * *

# சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், அவருடைய சிந்தனைகளும், அவர் எழுதிய நூல்களின் சுருக்கங்களும், பொன் மொழிகளும் ஏராளமான விளக்கப் படங்களும் அடங்கிய நூல் வரிசை.]

## 1. டார்வின்

'குரங்கினமும் மனித இனமும் ஒரு பொதுவான மூதாதை இனத்திலிருந்து உண்டாயின' எனக் கூறிச் சிந்தனைப் புரட்சி செய்து விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தார் டார்வின்.

*— ஜெகசிற்பியன் எழுதியது.*

## 2. பிளேட்டோ

புரட்சிகரமான சிந்தனைகள் அனைத்திற்கும் மூலவேர் என உலகம் முழுதும் கருதப் படுபவர் பிளேட்டோ.

*— அரு. ராமநாதன் எழுதியது.*

## 3. கார்ல் மார்க்ஸ்

பொருளாதார விடுதலையே மனித குல மாண்பு என பொதுவுடைமைப் பொருளாதாரப் புரட்சி செய்தவர் மார்க்ஸ்.

*— ரா. தணலன் எழுதியது.*

## 4. ரூஸோ

பிரஞ்சுப் புரட்சிக்கு மூல காரணமானவர் எனவும், சுதந்திரத்தின் தந்தை எனவும் புதுமையைச் சிருஷ்டிக்கப் பிறந்தவர் எனவும் உலகம் போற்றிப் புகழும் சிந்தனையாளர் ரூஸோ.

*— கோமேதகவேலு எழுதியது.*

## 5. பெஞ்சமின் பிராங்ளின்

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரப் புரட்சியி போது விடி வெள்ளியாக விளங்கியவர் பெஞ்சமின் பிராங்ளின் தனி மனிதனின் முன்னேற்றத்தையும் தேச முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்தித்தவர்.

*மார்கரெட் கசின்ஸ்— அரு. ராமநாதன் எழுதிய*

**ஒவ்வொன்றும் விலை ரூபாய் 1—4—0**

**பிரேமா பிரசுரம் : : சென்னை-24**

# புதுமுறைத் துப்பறியும் நாவல்கள்

**ரத்தப் பசி** *சிரஞ்சீவி எழுதியது*

[சிறைஇருளுக்குள்ளே, —இராவணன் முடி, மாயா ஜாலத் திருடன் மாலி, முதலிய பயங்கர அத்தியாயங்களை உடையது.]

விலை ரூ. 1-4-0

**மர்மத் தீவு** *சிரஞ்சீவி எழுதியது*

[ஒரு மாயத் தீவிற்குப் பத்துப்பேர் செல்லுகிறார்கள். மனித வாடை தட்டுப்படாத அந்தத் தீவிலே, மர்மக்குரல், மாயமனிதன், குறளி வித்தை, குமரி ஆசை, இவற்றிடையே அடுத்தடுத்து மர்மக் கொலைகள் நிகழ்கின்றன சுவையான நாவல். விலை ரூ. 1-4-0

**காதலன் கொலை வழக்கு** *சிரஞ்சீவி எழுதியது*

[தத்ரூபமான கோர்ட் நடவடிக்கைகளுள்ள முதல் பாகமும் துப்பறிபவரின் புலன் விசாரணையுள்ள இரண்டாவது பாகமும் அடங்கியது.] விலை ரூ. 1-4-0

**இரட்டைக் கொலை** *ஜெகசிற்பியன் எழுதியது*

['அபாய அறிவிப்பு' பத்திரிகாசிரியர் படுகொலை செய்யப் பட்ட மர்மத்தின் முடிவு திடுக்கிடக்கூடியது. யாரும் எதிர்பார்க்க முடியாதது] விலை ரூ. 1-4-0

**துப்பறியும் ராஜு** *மேதாவி எழுதியது*

[அக்காள் மரணத்தைக் கண்டு பிடிக்கப் பிராணபத்தான, மர் மங்களிளெல்லாம் புகுந்து புறப்படுகிறான் தம்பி ராஜு]

விலை ரூ. 1-0-0

**மர்மக் கொலை** *சிரஞ்சீவி எழுதியது*

[மனைவியைக் கொலை செய்தவன் யார்? கப்பிப்பாறைக் கந்தப் பன் என்ற திருடனுக்கு அதிலுள்ள சம்பந்தம் என்ன? பலரின் நெஞ்சைக் கவர்ந்து மூன்றாவது பதிப்பாக வெளிவந்துள்ளது.]

விலை ரூ. 1-0-0

**நீதி மயக்கம்** *சிரஞ்சீவி எழுதியது*

[கணவன் கொலையுண்டு கிடந்தான். காதலன் குற்றவாளி எனக் கருதப்பட்டான். ஆனால் முடிவு என்ன?] விலை ரூ. 1-0-0

**பேய் வீடு** *சிரஞ்சீவி எழுதியது*

[மாலதியின் கணவன் காட்டுப்பாதையில் ஒரு சூனியக்காரக் கிழவியைச் சந்திக்கிறான்—அவனும் மாமாவும் மறைந்துபோன ஒரு பேய் வீட்டிற்குள் மாலதியும் துப்பறியும் ராஜாமணியும் அகப் பட்டுக் கொள்கிறார்கள். முடிவு என்ன?] விலை ரூ. 1-8-0

**ரகசிய அறை** *'மேதாவி' எழுதியது*

[காதலுக்காக நடிகையாக மாறும் மனோரமாவிற்கு இரு பயமுறுத்தல் கடிதங்கள் வருகின்றன. ஒன்றை எழுதியவன் கொலைப்படுகிறான். இன்னொருவன் அவளைத் தூக்கிச் செல்ல முயல்கிறான். மிகவும் விறு விறுப்பான நாவல்.] விலை ரூ. 1-4-0

## பொற்காசையும் மிஞ்சிய

# பொன்மொழிகள் வரிசை

ஔவையார் பொன் மொழிகள் *அரு. ராமநாதன் எழுதியது.*

[ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், தனிப்பாடல் முதலாக, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை வரை, ஔவையாரின் நூல்கள் அனைத்திலிருந்தும் திரட்டப்பட்ட பொன்மொழிகள். முக்கியமான நூல்களுக்கு மூலப்பாடல்களும் புது உரைகளும் தரப்பட்டுள்ளன. முற்றிலும் புதிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட இரண்டாவது பதிப்பு.]

விவேக சிந்தாமணி பொன் மொழிகள் *'சிரஞ்சீவி' எழுதியது.*

[சேல் அகட்டிய என்ற சொல்லைத்தான் சேலை கட்டிய என்று வழக்கத்தில் மாற்றி விபரீத வியாக்யானத்தைத் தந்துவிட்டார்கள். சேல் அகட்டிய என்றால் விழியைச் சுழற்றும் விலைமாதர் என்றுதான் அர்த்தம். இதைப் போன்ற விரிந்த கருத்துரைகளைப் புது மெருகோடு தருகிறது இந்நூல்.]

புத்தர் பொன் மொழிகள் *அரு. ராமநாதன் எழுதியது.*

[புத்தர்பிரான் சிந்தனைகளையெல்லாம் பல நூல்களிலிருந்தும் திரட்டிப் பொன்மொழியாக அகர வரிசையில் தருகிறது இந் நூல்.]

திருக் குர் ஆன் பொன் மொழிகள்

*எம். அப்துல்-வஹாப் எம். ஏ; பி. டி. எச். எழுதியது.*

[சகல மதத்தினருக்கும் நல்லருளாகவும், நேர் வழிகாட்டியாகவும் இதய நோய்களுக்கு அருமருந்து போன்றும், விளங்குகிறது.]

பைபிள் பொன் மொழிகள் **இயேசு நேசர் எழுதியது.**

[ஆழ்ந்த சிந்தனைகளைப் பலவிதப் பொருட் பாகுபாட்டின் கீழ் அகர வரிசையில் புதிய தமிழில் தருகிறது இந்நூல்.]

பஞ்ச தந்திரம் பொன் மொழிகள்

*தி. நா. சுப்பிரமணியம் எழுதியது*

[வாழ்க்கைச் சதுரங்கத்தில் வெற்றிபெற வழிகாட்டும் பொன்மொழிகளைத் திரட்டித் தருகிறது இந் நூல்.]

ஒவ்வொன்றும் விலை எட்டு அணாதான்!

[முன்பணம் அனுப்பித் தேவையான பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு ரூபாய்க்கு உட்பட்ட தொகைக்குத் தபால் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.]

**பிரேமா பிரசுரம் :: சென்னை-24**